முதல் மாதத்தில் முடை தோன்றினால் பிராமிச்சம், தகரம் யிவைசரிகூட்டிக் குளிர்ந்த தண்ணீரிலாகிலும் பாலிலாகிலும் அரைத்துக் கொடுக்க. வேதனை போம். கெர்ப்பம் நழுவாது.

இரண்டாம் மாதத்துக்கு நெய்தல்க் கிழங்கும் கொட்டிக்கிழங்கும் கற்கடக-சிங்கியுங் கூட்டி அரைத்துக் குளிர்ந்த தண்ணீரில் குடிக்க வேதனை பொறுக்கும்.

மூன்றாம் மாதத்துக்கு நாகப்பூ தாமரைத் தாது அதிமதுரம் மரைத்துத் தண்ணீரில்க கொடுக்க வேதனை பொறுக்கும்.

நாலாம் மாதத்திற்குத் தாமரை முளை யிலையுஞ் சித்தாமுட்டி வேர் - வாழைக்கிழங்கு இவையரைத்துத் தண்ணீரில் கொடுக்கக் கெர்ப்பத்தின் மேல் சூலை போம்.

அஞ்சாம் மாதத்துக்கு நெய்தல்க்கிழங்கு
கார்கோளரி விதையு மரைத்துத் தண்ணீரிற்
கொடுக்கக் கெர்ப்பத்தின் மேல் நோவை போம்.

ஆறாம் மாதத்துக்கு நெய்தல்க்கிழங்கு
முந்திரிகைப் பழமும் நாகத்தாது முன்விதையும்
தண்ணீரிற் கொள்ள வேதனை தீரும்.

ஏழா மாதத்துக்கு சர்க்கரையும் நெய்யும்
பொரியும் விளாம்பழமும் திருமூலகமும்
தண்ணீரிற் கொள்ள வேதனை போம்.

எட்டா மாதத்துக்கு பதுமுகம், நெய்-
தல்க்கிழங்கு, கொத்தமல்லி, கைமுந்திரிகைப்-
154. பழம், அத்தி, திப்பலி யிவை இரண்டு பல
தண்ணீரிற் போட்டு உழக்காகக் காய்ச்சிக்
கொடுக்கக் கர்ப்ப நோவை போம்.

ஒன்பதாம் மாதத்துக்குக் கார்கோழு-
விதை, திற்றாமணக்குவேர், பாலாசம்
விதையு மரைத்துக் கருப்புக் கட்டியுங் கூட்டி
பணியாரமாகச் சுட்டுக் கொடுக்க கெர்ப்ப-
நோவை போம்.

பத்தாம் மாதத்துக்கு குமிளம்வேர்,
நெய்தல்க் கிழங்கு, அதிமதுரம் யிவை கூட்டிக்
குழைந்து நீரில் குடிக்க கெர்ப்ப நோவை போம்.

கெர்ப்பத்தின் மேற் அருத்துக்கு.

நாகப்பூ, பாளைவேர், பொன்முசுட்டை வெட்டிவேர், முத்தக்காசு, அக்கி யிவை கூட்டிக் கஷாயம் பண்ணிக் கொடுக்க கெர்ப்பத்தின் மேல் அரும் போம்.

யோனிக் கிரணைக்கு.

யோனிக் கிரணைக்குத் திப்பிலிவேர்ப் பாலிலே போட்டுக் காய்ச்சி நெய்விட்டுக் குடிக்க கெர்ப்பத்து மேல் யோனிக் கிரணை போம்.

கெர்ப்பத்து மேல் கழிச்சலுக்கு.

திருகாக்கிளை வேர் - பொன்முசுட்டை அக்கி, சித்தாமுட்டி, முத்தக்காசு யிவை குடிநீரிட்டுக் குடிக்கக் கெர்ப்பத்தின் மேல் கழிச்சல் நிற்கும்.

யாதுவம் மாங்கொட்டை, அத்திப்பூ, வெள்ளை லோத்திரம் யிவை கழனியிலரைத்துக் கொள்ளியக் கொடுக்க கெர்ப்பத்தின் மேல் கழிச்சல் நிற்கும்.

கெர்ப்பக் கிரணைக்கு.

தேங்காய்ப் பாலும் பசுவின் பாலும் காய்ச்சிக் கொடுக்க கெர்ப்பத்தின் மேல் கழிச்சல் நிற்கும் கெர்ப்ப கிரணையும் போம்.

—

வில்வை வேர், விளாமிச்சம் வேர், நெல்பொரி யிவை காய்ச்சிக் கொடுக்க கெர்ப்பத்தின் மேல் சத்தி தீரும்.

மாதுளம் கொத்தமல்லிகை கனியிலரைத்து சர்க்கரை கூட்டிக் கனியாக் குடிக்கச் சத்தி தீரும்.

கெர்ப்பத்தின் மேல் அக்கினி தீபனத்துக்கு.

அக்கிரா, அசமோதகம், திப்பலி, [illegible], சீரகம் பிவை சமன் கூட்டிப் பொடி செய்து தேன் கருப்புக்கட்டியுடன் கொள்ள கெர்ப அக்கினி தீபனமாம்.

பிள்ளை சுருக்கப் பிறக்க.

பேய்க்கரும்பஞ் சாறும் பனை நுங்குங் கொடுக்க பிள்ளை சுருக்கப் பிறக்கும்.

பித்த மூலரோகத்துக்குத் தயிலம்.

முசுமுசுக்கை சாறு படி-1, எலுமிச்சம்-
155. பழச்சாறு படி-1, நல்லெண்ணெய் -படி-1
இவை கூட்டி எரித்து மெழுகு பதத்தில் வடித்துத் தலை முழுகிவர -மூலக்கத் தீரும் வியாதி - பித்தம் நாற்பதும் கைகால் எரிவும் நினைவு தப்புகிற பயித்தியமுந் தீரும்.

ரெத்தக் கழிச்சலுக்கு

அதிமதுரம், நெய்தல்க் கிழங்கு பாலும் நெய்யும் கூட விட்டுக் கொடுக்க ரெத்தக் கழிச்சல் தீரும்.

கெர்ப்பத்தின் மேல் வீக்கத்துக்கும் அதின் மேல் குடல் பிரட்டுக்கும் அதின் மேல் குன்மம் பின்நோவம் யாதுகளுக்கு —

ஆரணை வேரும் பாலும் யாந்தியும் தண்ணீரும் பாலுங் கூட்டி ராத்திரி காலமே கொள்ளத் தீரும்.

யாதும் தண்ணீரும் பாலும் கலந்து இஞ்சி போட்டுக் காய்ச்சிக் கருப்புக்கட்டியுந் ~~[illegible]~~ கலந்து திப்பலி மென்பொடி போட்டுக் கொடுக்கக் கெர்ப்ப வீக்கம் போம்.

ஆரணை வேர் கஷாயம் வைத்து கருப்புக்கட்டி யடித்துப் போட்டு நெய்யுங் கலந்து கொடுக்க. கெர்ப்ப வீக்கம் குடல் பிரட்டும் போம்.

கெர்ப்பத்தின் மேலிருமல் இரைப்புக்கு

கடுக்காய், வசம்பு, சுக்கு, சிறுதேக்கு, கடுகுரோகணி இவை காய்ச்சிக் கருப்புக்கட்டியுந் கலந்து கொடுக்க கெர்ப்ப இருமல் இரைப்பு தீரும்.

வயிற்று வேதனைக்கு.

அஜமதாகம், பித்தக்காசு, ஆசனத்தில் மாந்தம்-
பந்து, அக்கு யானை வளைத்து புளித்த ரோகங்கள்
கொடுக்கக் கெர்ப்ப வேதனை போம்.

கெர்ப்ப வெப்புருக்கு எண்ணெய்.

பேய்க் கொமட்டிக்காய்ச் சாறு - படி - ௧,
ஈ. வெங்காயச் சாறு - படி - ௧, சித்தாமணக்கு
யெண்ணெய் - படி - 1, அக்கு, மிளகு, ~~[illegible]~~
திப்பலி, ~~[illegible]~~ யிந்துப்பு, இலுப்பைப் புண்ணாக்கு
கடுக்காய் வகைக்கு விராகனிடை - ௨ வெண்-
ணெயுஞ் சாறுஞ் காய்ந்து வருகிற பக்குவத்தில்
மருந்துகளைப் பொடிசெய்து அதிலே தூவி [illegible]
யிறக்கி வைத்துக் கொண்டு மூன்று மாதத்தில்
ஒருமுறை ஒருகரண்டி கொடுத்து வரவும்.
உப்பாகாது. வெந்நீருஞ் சோறும் பத்தியம்.
இப்படி மூன்று நாட்கள் குடிக்கவும் - யிப்படி
நாலைந்து முறை கொடுக்க கெர்ப்பத்துக்கு விக்கின-
மாயிருக்கிற வியாதி~~[illegible]~~கள் யிப்படி
யாத எண்ணெய் சாப்பிடும் போது ஒருபோண-
டலம் பாயிற்றிம் வேண்டிக் கொண்டு சாப்பிட்டு
தீரும். விக்கினமின்னை.

156. குஷ்டம் படைகளுக்கும் சிவனார் வேம்புத் தைலம்.

சிவனார் வேம்பு - பலம் - 50 இவை நறுக்கி
உள்ளீர மிருக்க நிழலுலர்த்தி பானையிலடைத்து

பாணைக்குத் தக்க குழி வெட்டி குழிக்கு நடுவே
திறக்கலசம் கழுத்து மட்டும் புதைத்து பாணை
அடியிலே தட்டைக்குச் சூது கிறாப் போலே
மூணு துவாரமிட்டு அந்த துவாரத்து அடியிலே
புதைத்திருக்கிற கலசம் நடுவே சாயாமல்
வைத்து காட்டு விராட்டி அடுக்கிப் போட்டு
நெருப்புங் குத்திப் போட்டு மேலும் பூசு விராட்டி
அடுக்கிப் புகை அடங்கினதின் மேல் ஆட்டெரு
மேலே முட்டமாகக் கொட்டி நன்றாய் ஆறின-
தின் பிறகு பாணையும் சாம்பலையும் எடுத்துப்
போட்டு கலசத்திலிருக்கிற தயிலத்தை எடுத்து
வைத்துக் கொண்டு ஒரு காசிடை வெண்ணெயி-
லாகிலும், அப்பம் பசுவெண்ணெயிலாகிலும் பருவத்-
தானாக் கொள்ள குஷ்டம் பதினெட்டும் தீரும்.

உப்பு புளியாகாது.

வயறு கருப்புக் கண்டால் வெள்ளாட்டுப்-
பால் கூட்டவும்

பித்தஞ் சுத்தி விக்கலுக்கு சூரணம்.

குத்தமான முதன்வலி போக்கவும்
கொடிய தவசரம் விக்கல் சத்தியும்
பித்த மான பல்பிணி போக்கவும்
பார்த்து வைத்த மருந்தின் பெருமையை
கொத்த மல்லி கடுகு ரோமச் சையும்
கோஷ்டந் திப்பிலி யாந்து மிளகுடன்
மஞ்ச · வேலமுஞ் சந்தனஞ் சீரகம்
வகைக்கு சமன் கொண்டு தினியாய் உடித்து

குத்து மின்னாத பசுவின்நெய் தேனிலே
குழைத்து நாள்தோறுங் கொண்டவர் திங்களில்
சுத்தி விக்கல் தணிவலி பித்தமும்
சுகல தாபந் தணியுமெய் சொன்னோம்.

மாந்தகணம் உட்காய்ச்சலுக்கு வல்லாரை நெய்.

பசுவின் நெய் படி-1 வல்லாரைச்சாறு-
படி-கி, ஈ.வெங்காயம்-பலம்-4, ஒருக்-
தனை வெள்ளைப்பூடு-1 வசம்பு-மரமஞ்
நற்சீரகம்-பலம்-உளு, வேலம்-விராகனிடை-
3, கிராம்பு-விராகனிடை-1 வல்லாரை
யனை யாகியும் போடவும்.

கடைமருந்தை யடித்துப் போட்டு ஈ.3
ஈ.3 வெங்காயத்தை அறுத்துப் போட்டு
வெங்காயம் பொன்னிறமாய்ப் பதத்தி-
157. லிறக்கி வைத்து கணம், உட்கசுரம்
யாதுக்கருக்கு ஒருகரண்டி கொடுக்கவும்.
தீரும்.

சிறுபிள்ளை மாந்தத்துக்கு எண்ணெய்.

முன்னிவேர், கோழியவரை வேர், பழம்பாசி,
சித்தாமுட்டி வேர், தெப்புநெருஞ்சி, சிறுபுள்ளடி,
நரிப்பயத்தம் வேர், தவசிமுருங்கை வேர்,

இந்திரவாலி, இளிப்பட்டன், தகரைவேர், நொச்சிவேர், சிந்தில்வேர், நாவல்பட்டை, உதியம்பட்டை, கருவேலம்பட்டை, வெள்வேலம்பட்டை இதுவெல்லாம் படி தயண்ணைக்கு வகைக்கு பலம் ½ கூட்டி யெண்ணையிற் போட்டு எரித்து மார்தங் கணத்திற்கு ஒரு கரண்டி கொடுக்கவும். பத்தியமாயிருக்கவும்.

<u>சுண்ணம்</u> சாதிக்காய், கிராம்பு, ஏலம், கோஷ்டம், சீரகம், சண்பகப்பூ, சித்தரத்தை, லவங்கப்பட்டை, அக்கி, திப்பிலி, மிளகு, சாதிபத்திரி, தேவதாரம், கடுக்காய் - விராகனிடை வகைக்குக் கூட்டி முன் யெண்ணையுடனே கூட்டி யெரித்துப் பத்திரில் வைத்து மார்தங் கணத்துக்கு ஒருகரண்டி கொடுக்கவும்.

<u>வேறு மார்த கணத்துக்கு மாத்திரை.</u>

திரிகடுகு, கருஞ்சீரகம், பொன்முசுட்டை வேர், கடுக்காய் சமன் அளவு கூட்டி ஆடாதோடையிலை யரைத்துப் புட்டவித்து அந்தச் சாற்றிலரைத்து கடலைப்பிரமாணம் உண்டை செய்து சோறுண்ணும் பிள்ளைக்கு வெந்நீரில் விடவும். முலையுண்ணும் பிள்ளைக்கு முலைப்பாலில் விடவும். பத்தியமாய் இருக்கவும்.

271.

வல்லாரை நெய்

வல்லாரை சமூலம் - பலம்-15, ஈ.வெங்-காயம் - பலம்-10, சீரகம், கருஞ்சீரகம் கிராம்பு, சித்தரத்தை, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலம், அதிமதுரம், அக்கிராகாரம், கொத்தமல்லி வகைக்கு பலம்-வ, வசம்பு பலம்-ஜு, உள்ளிப்பூடு-2, நெய்-படி-1

வல்லாரை யிடித்துக் காலேயரைக்கால்-படி சாறு விடவும். ஈ.வெங்காயத்தை அரிந்து போடவும். வசம்பு, வெள்ளைப்பூண்டு தட்டிப் போடவும். மற்ற மருந்தை அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து உள்ளுக்குக்
158. கொடுத்து வரவும். இதுக்குத் தீரும் வியாதி-உள்க்காய்ச்சல், சரீரம் உணர்ந்து போனது. உஷ்ண வகைக் காணைவு தீரும். திருமன்-னைகள் அனைத்துக்கு மாகும்.

தொண்டைத்தாருக்கு

நல்லெண்ணெய் - படி-வ வட்டத்துத்தியை ஒரு பிடி போட்டு எரித்து முருகின பதத்திலிறக்கி உள்ளுக்குங் கொடுத்து புண்ணு மேலும் போடு வர தொண்டைத்தாரு தீரும். கைகண்டது.

வேறு பீனிசத்துக்கு

நல்லெண்ணெய் படி-வ, மிளகு பலம்-1

நிலக்குமிழ் வேர்ப்பட்டை - பலம் - ௪, செண்-
பகப்பூ - பலம் ௪, அவரிவேர் - பலம் - ௪,
கையாந்தகரை வேர் - பலம் - ௪, சித்தாமுட்டி-
வேர் - பலம் - 1, திருக்கீரை வேர் - பலம் - ௨
நன்னாரிவேர் - பலம் - ௨, பொன்னாங்காணிவேர்-
பலம் - ௨, ஆதண்டைவேர் - பலம் ௨ மிதுனைன்-
பா ணைத்தாகியுங் அஷ்டயம் வைத்தாகியும்
எண்ணையுடனே விட்டு எலுமிச்சம்பழச்-
சாறு - படி - ௨, நாரத்தம்பழச்சாறு - படி - ௨
கூட்டி வடித்து எட்டுனாளைக் கொடுக்கவும்
முருகவும். பின்சம் பெட்டுவைகையும் முன்
சொன்னதும் தீரும்.

அ.

மருந்தீட்டுக்கு.

நல்லெண்ணெய், முடக்கொற்றான், பாசி-
யலை, பசுநெய் வகைக்கு சரிசாறுங் கூட்டி
சாப்பிடவும். மருந்தீடு முறியும்.

சந்தனாதித் தைலம்.

சத்தாவரிச் சாறு படி - 1, திருக்கீரை,
நெல்லிக்காய், முசுமுசுக்கை, சிறுபயத்தங்-
கொடி, தண்ணீர்விட்டான் கிழங்கு, சீந்தில்
தண்டு, பனைநீர், பசுவின்பால் இவை சாறு
வகை வகைக்கு படி - 1, நல்லெண்ணெய்-
படி - 3 கற்கம் - சந்தனம், வெட்டிவேர்,

விளாமிச்சம் வேர், முத்தம், நன்னாரிவேர்,
நெய்தல்கிழங்கு, கொட்டிக்கிழங்கு
செங்கழுநீர்க் கிழங்கு, தாமரைவளையம்
வகைக்கு பலம்-2, அதிமதுரம், சண்பகப்பூ
லவங்கப்பட்டை, சீனாக்காரம், தக்கோலம்,
கூகைநீறு, ராமச்சன், செவ்வள்ளிக்-
கொடி, அரத்தை, சதகுப்பை, அசமதாகம்,
சீரகம், கொத்தமல்லி, தேவதாரம், வெள்ளி-
லோத்திரம், அகில், முந்திரிகைப் பழம், பேரீச்-
159. சம் பழம், ஏலம், சடாமாஞ்சி விராகனிடை-
3. இவை கூட்டி அரைத்துக் கரைத்துப்
பதத்தில் வடித்து அந்த நாட்களுக்கு கொடுக்க
யாதுக்குத் தீரும் வியாதி-
கள் முழுகவும். பித்தம் நாற்பது வகையும், கைகாலெரிவு,
ரெத்தபித்தம், நவப்பிணிசம், உள்க்காச்சல்-
பிரமியம், நீர்க்கடுப்பு, தலைசுத்துகிற
பயித்தியம், உஷ்ணம், சிலேற்றும்,
நாசியின் நீர் வடிகிறது. சயமிருமல்
இவை தீரும் கைகண்டது.

<u>மகாவில்வாதி லேகியம்</u>

வில்வவேர் - பலம் 50, நெல்லிவத்தல்,
~~[illegible]~~ [illegible]
லாமிச்சம் வேர், சீந்தித்தண்டு,
வேர், நிலப்பனைக்கிழங்கு, கொத்தமல்லி,

தண்ணீர்விட்டான் கிழங்கு, கோரைக்கிழங்கு-
சித்தரமுட்டி வேர், சந்தனக்கட்டை, நன்னாரி-
வேர் வகைக்கு பலம் 10, வில்வவேர்
மேல்பட்டை தள்ளிப் போட்டு உழக்-
கொள்ளைப் பதம் போலவே நீவி மற்றதை
நன்றா யிடித்துத் தண்ணீர் படிக்குத்
தண்ணீர் விட்டு நாலு படியாக வடித்து
அ. அதில் சர்க்கரை பலம்-50 இஞ்சிச்சாறு-
படி-1கு, பனீர்-படி-1கு, கொம்மட்டி
மாதளம்பழச்சாறு படி-1கு, தண்ணீர்விட்டான்
கிழங்குச்சாறு-படி-1கு, வெள்ளை வெற்றிலைச்
சாறு படி-2, பூசணிக்காய்ச் சாறு படி-1கு,
எலுமிச்சம் பழச்சாறு படி-2 இவை
யெல்லா மொன்றாய்க் கலந்து இருப்பு-
யாகக் காய்ச்சி முன்கஷாயத்தில் சர்க்கரை
கரைத்து வடிகட்டிக் கொண்டு பாகுச்-
சாறுங் கூடவிட்டு பாகின் பக்கம-
பாகுகாய்ந்த பின் படி - படி 1கு, பசுவின்
நெய் விட்டு வருத்தி யிடித்துக் கொள்ளவும்.

முந்திரிகைப் பழம், பேரிச்சம் பழம்,
அதிமதுரம், ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ,
லவங்கப் பத்திரி, விலாமிச்சம்வேர், சாதிக்காய்,
இலவங்கப்பூ, கொத்தமல்லி, சடாமாஞ்சி
சந்தனம், வேர்க்கட்டை, கோஷ்டம்,

திரிசுபத்திரி, சீரகம், கருஞ்சீரகம், வாய்-
விளங்கம், நெல்லிவத்தல், ~~தா~~ தாணிக்காய்,
கடுக்காய், சாதிக்காய், கோரைக் கிழங்கு,
நன்னாரி வேர், ஏலம், உகைநீறு, சன்ன-
160. லவங்கப்பட்டை வகைக்கு பலம்-1, தேசா-
புரம்-பலம்-உ, அக்கு-பலம்-உ, ~~மிள்~~
மிளகு-பலம்-3, திப்பிலி-பலம்-6 யிவை-
யெல்லா மிடித்து வஸ்திரகாயம் பண்ணி
பாகுபதத்தில் தூவிக் கிண்டிப் பதத்தி-
லிறக்கி பிரமணையில் வைத்து ஆறின பின்பு
தேன்படி ரெண்டு விட்டுக் கிண்டி யெண்ணை
பழகின கலசத்திலிட்டு நெல்லுப்பானையில்
18 நாள் வைத்தெடுத்து நேரத்துக்கு ஐராக-
ண்டை- உக்கு கொள்ளத் தீரும். வியாதி-
குன்மங் காமாலை, சோகை, பாண்டு, விஷபாக்
யருமல்க் குடல் புரட்டு, வாய்வு, அரோசிக்
விக்கல், சத்தி, கிராணி, கைகாலெரிவு, தொண்-
ணோக்காளம், யருமல், உள்க்காய்ச்சல்
நெத்திக்காசம், பித்த மயக்கம், கூசை யெரிவு,
அக்கினிமந்தம், மலசலமடைபட்டது
யிவையெல்லாந் தீரும்.

பீனிசம் வெட்டுக்கும்
தைலக் கியண்ணம்

பீனிசம் எட்டுக்குந் தலைக்கு எண்ணெய்

கித்தாளஞ் சாறு - படி - 4, வெட்டிவேர் - பலம் - 5, விளாமிச்சம் வேர் - பலம் 5 இவை யனைத்து மூன்றுபடி தண்ணீரில் போட்டு நாழியாகக் காய்ச்சி வடித்து கித்தாளஞ் சாறுடன் கலந்து ~~[illegible]~~. திரும்ப யெரித்து நாழியானவாறே யாக்கி - யதுக்குக் கற்கம் - கோஷ்டம், கஸ்தூரிமஞ்சள், சாதிக்காய், மாஞ்சில், தகரம், விளாவரிசி, சந்தனம், அகிலம், அத்தி, திப்பலி, கண்டில் வெண்ணை, கடுகுரோகணி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, செங்கழுநீர்க் கிழங்கு, தாமரை வளையம், நெய்தல் கிழங்கு, சிறுக்கீரை வேர், கொட்டிக் கிழங்கு, நன்னாரி வேர் வகைக்கு விராகனிடை - 3 கூட்டியனைத்து நல்லெண்ணெய் படி - 5 யிளநீர் படி - 5, பசுவின்பால் படி - 5 யிவை யெல்லா மொன்றாய்க் கூட்டி யெரித்து மெழுகு பதத்தில் வடித்து முழுகவும்.

அரப்புக் கொதிக்க வைத்துத் தேய்த்து முழுகவும். தீரும் வியாதி - மண்டைவியாதி, பித்தம், செவிநோவு, கண்ணோவு, தலைவலி பல் ~~[illegible]~~ நோவு, பீனிசம் யிவையெல்லாந் தீரும்

௨77,

திப்பலி ஆதிலேகியம்.

161. திப்பலி - பலம் -16, சர்க்கரை பலம் -8
வாய்விளங்கம் பலம் -4, சுக்கு - பலம் -4
சிறுதேக்கு - பலம் -4, மிளகு - பலம் 4, ~~சீர~~ சீரகம் -
பலம் -4, செவ்வியம் - பலம் -4, திப்பலி -
மூலம் - பலம் -2, அறைபொடி - பலம் -2
கையாந்தகரை - பலம் -2, சித்திரமூலவேர்ப் -
பட்டை - பலம் -1, ஏலம் - பலம் -1, லவங் -
கப்பட்டை - பலம் -1, லவங்கப்பத்திரி -
பலம் -1, கடுக்காய் பலம் -1, தான்றிக்காய் -
பலம் -1, நெல்லிப்பருப்பு - பலம் -1, ஜாதிக் -
காய் - பலம் -1, சிறுநாகப்பூ - பலம் -1
இவை இடித்து பொடித்து வடிகட்டித்
தேன் விட்டுக் கிண்டி வேடுகட்டி நெல் -
லுப்பானைக்குள்ளே 15 நாள் புதைத்து
வைத்து எடுத்து நேரத்துக்கு ஒரு
கொட்டைப்பாக்களவு இரண்டு நேரம்
கொள்ளவும். தீரும்வியாதி - 11 வகைச் -
சயரோகங்களும் அசாத்திய காசம்,
அரோசிகம், பீனிசம், தொண்டைக்கம்மல்
காசம், சீதசுரம், விஷசுரம், மூளைமாந்தல்
நாவரமாந்தல், நேரந்தப்ப வருகிற காசம்
இவைகள் தீரும். பத்தியம் - கைப்பு புளிப்பு
தவிரவும்.

உதிர சுத்திகரித் தைலம்

விளாமிச்சம் வேர், நன்னாரி, கோரைக்-
கிழங்கு, நெல்லிமுள்ளி, சித்தாமுட்டி, சீந்திக்-
கொடி, தாமரை வளையம், வெட்டி வேர்,
சந்தனம் வகைக்கு பலம்-1 பொடித்துப்
பத்துத் தண்ணீர் விட்டு ஒன்று பாயாய்க்
காய்ச்சி பொருத்தி நல்லெண்ணை நாழிவிட்டு
கற்கம், அதிமதுரம், சந்தனம், செஞ்சந்தனம்,
கோஷ்டம், செங்கழுநீர்க் கிழங்கு,
மஞ்சிட்டி, நன்னாரி வேர், ஏலம், லவங்-
கம், லவங்கப் பத்திரி, தக்கோலம், [illegible]-
சடாமாஞ்சி, சதகுப்பை, கச்சோலம்,
வெட்டி வேர், ஜாதிக்காய், பச்சைக்கற்பூரம்-
கஸ்தூரி, தேவதாரம், அஞ்சனக் கல்லு,
கடுகுரோகணி, புழுகு, முந்திரிகைப் பழம்,
அகிலம், குங்குமப்பூ, கடுக்காய், தான்றிக்காய்-
செண்பகப்பூ வகைக்கு வராகனிடை-1 கி
அரைத்துக் கரைத்து நாழி பசுவின்பால் விட்டு
162. பதத்தில் வடித்து முழுகத் தீரும் வியாதி-
உடம்பெரிவு, தலையெரிவு, மயக்கம்,
கிறுகிறுப்பு, காலெரிவு, கையெரிவு, பாண்டு,
சுரம், ரத்தபித்தம், இருமல் இளைப்பு, பிரமே-
கமிருபதுந் தீரும். தாது வர்த்திக்கும் கைகண்டது

கிரந்தி ரோகண புண்ணுக்குக் களிம்பு.

கருவேலம் பிசின் - பலம் 2, மாவலம் - பிசின் - பலம் - ௨ யாதுமொன்றும் நறுக்கிப் பொடி செய்து ஒரு சிரங்கை தண்ணீர் போட்டுக் காய்ச்சிக் குழம்பானவுடன் சீலைவடி கொண்டு மருந்துக் கிண்ணத்தில் வார்த்து ரசம் - விராகனிடை - 4 துடைவிட்டுச் சிறுகச் சிறுகவிட்டுச் சேரமட்டும் அரைத்து மறுநாள் எடுத்துத் தக்கது பண்ண நெய் வார்த்து மெழுகுவரைத்துப் பசுவின் வெண்ணெய் சிறுகப் போட்டுக் கடைந்தரைத்துப் பத்திரம் வழித்துக் கொம்புச் சிமிழிலாகிலும், செம்புச் சிமிழிலாகிலும் வழித்து வைத்து கிரந்தி, குஷ்டம், வெடிபுண் முதலிய புண்களுக்குச் சீலையிலாகிலும் மெழுகிலாகிலும் தடவிப் போடவும். இந்த ரணமும் ஆறும். பத்தியம் - புளிப்பு, புகையிலை கிரந்திப் பண்டம் தள்ளவும். கைகண்டது.

வாய்வு அரோசியத்துக்கு.

வறுத்த பருத்திக் கொட்டைத் தோடு - பலம், நெற்பொரி - பலம் - 1, ஏலம் - விராகனிடை - ௨ அக்கு - விராகனிடை - ௨, திப்பிலி - விராகனிடை - ௨

இவை கூட்டி பொடித்து வடிகொண்டு
சமன் சர்க்கரை கலந்து கொடுக்க
வெருகடி பிரமாணம் இரண்டு வேளையும்
கொள்ள அரோசிகம் பயித்தியம் பசியின்-
மையிருக்கிறது நீங்கும் கைகண்டது.

சன்னி பிரயாசிவுக்கு.

வெள்ளைச் சாரணையையும் சிதுப்-
பையும் நறுக்கி நசியம் விடவும்.
உள்ளுக்கு - நல்ல ~~[illegible]~~ முருங்கைப்
பட்டையை இடித்து மிளகு வெள்ளைவெங்காயம்
மஞ்சளிவை கூட்டி மிளகு நீராகச் செய்து
உள்ளே கொள்ளச் சன்னி பிரயாசிவந்
தீரும் கண்டது. ~~[illegible]~~ தெகின்னி வாசகம் அப்படி
சொன்னது. அப்படி மென்று நான் அப்படி
நசியம் பண்ணவும்.

163. சோகை, காமாலை, விஷபாகம்
சூலை ~~[illegible]~~ வீக்கம், பாண்டு இவைக்கு
சூரணம்.

கையாந்தகரைச் சாறு - படி 1, பெருந்-
தும்பைச் சாறு - படி - 1, உத்தாமணிச் சாறு
படி - 1, பெருமுருங்கைச் சாறு படி - 1,
கொஞ்சியணைச் சாறு - படி - 1, நொச்சி-
யணைச் சாறு - படி - 1, பாங்குப்பு, கல்லுப்பு

வெடியுப்பு, வளையலுப்பு, நவ்வுப்பு வகைக்கு
கழஞ்சி-2, வெங்காரம், சவுக்காரம்,
அரிதாரம், பொரிகாரம், சீனாக்காரம்
வகைக்கு கழஞ்சு-1, மனோசிலை-
கழஞ்சு-வ, இலிங்கம்-கழஞ்சு-இ, சுக்கு-
கழஞ்சு-1, திப்பிலி, சீரகம், ஆனைத்-
திப்பிலி, கருஞ்சீரகம், ஏலம் வகைக்கு
கழஞ்சு-1, கடுகு-கழஞ்சு-2, வெந்தயம்
கழஞ்சு-2, காயம்-கழஞ்சு-1, வெள்-
வெங்காயம் -கழஞ்சு-5, அரைபொடி-
படி-ரு, எலுமிச்சம்பழம் - 5, கடுகு-
ரோகணி, வாய்விளங்கம், வால்மிளகு-
வகைக்கு-கழஞ்சி-2, மிளகு-கழஞ்சி
3 பலை கூட்டி பொடித்து வஸ்திரகாயஞ்
செய்து அரைபொடியை எலுமிச்சம்-
பழச்சாறு விட்டு அரைத்து வைத்து கருங்-
கோழிக்கால், குடல், தலை மயிர் போக்கி
போட்டு பொடித்த மருந்தை வயிற்றுக்குள்ளே
வைத்துச் சாறுவகை எல்லாமொரு
பானையில் விட்டு கோழியை அதிலே வைத்து
சட்டிகொண்டு மூடிச் சீலைமண் செய்து
நீர்வத்த எரித்து எடுத்து எலும்பு
தள்ளிப் போட்டு மற்ற மருந்தை நன்றாய்க்

காயனைத்து பொடித்துக் கலசத்தில்
வைத்துத் தலை மூடி மறுநாள்
பெருகிடு பிரமாணம் நாலுநாள்க் கொள்ளவும்
5-ம் நாள் தேன், நெய், பாலிவைகளில் வியாதி
தீருகிற மட்டும் கொள்ளவும். பதிலே
மென்ல கட்டுப்பட்டால் பஞ்சிச் சாற்றி-
லாகும், அக்கிக்கஷாயத்திலாகும் வெந்-
காரம் ரெண்டு பணவிடை பொரித்திடவும்:
பதிலே வயிறு கடுப்புக் கண்டால் - பசுவின்
நெய்யிலே பீர்க்கங்காய் மிஞ்சி போட்டுப்
பொரித்துக் காய்ச்சி சோற்றிலே வார்த்துத்
தின்னவும். முன் சொன்ன வியாதிகளும்
பத்தியான அனேக வியாதி தீரும். உப்பு,
புளி, புகையிலை ஆகாது. பாதுசெய்து கை-
கண்டது.

ஒருதலை வலிக்கு.

வெள்ளைப் பூண்டு, ஒருத்தலைப் பூடு-
1, வசம்பு பிரமளவு சுத்தக்கிப்பலை-
மேனியிலை புகை ஊட்ட நறுக்கி நசியம்
பண்ணி வலதுபுறம் வலியானால் இடதுபுறம்
விடவும். இடது புறத்துக்கு வலதுபுறம்
பிழியவும். ஒரே தரம் விடவும். ஒருதலை-
வலி தீரும். கை கண்டது.

ஆறாத புண்ணுக்கு.

முனைப்பாசி பலம்-௧, விளக்கெண்-
ணெய் - பலம் - ௧ இவை இரண்டையுஞ்
சேர்த்து அதின்மேற் குப்பைமேனிச் சாறு
விட்டு மத்தித்து அதற்குத் தக்கது தேங்கா-
யோட்டை யரைத்து நன்றாய்த் தெளிவி
அதிற் போட்டு நன்றாய்ப் பசைந்தாகிய-
மதைத் தாகியும் சிமிழில் வைத்துச் சீலையி-
லூட்டி ஆறாத புண்ணின் மேற் போடவும்.
ஆறும் கைகண்டது.

சிறுபிள்ளைகள் மாந்தத்துக்கு.

தென்னங் கருப்புக்கட்டி - பலம்-2, சுக்-
கந்தகம் பலம்-௧; சாதிக்காய்-விராகனிடை-1
அ. சாதிபத்திரி-விராகனிடை-1, அதிவிடயம்-
விராகனிடை-1, மாசிக்காய்-விராகனிடை-1
ஏலம்-விராகனிடை-2, வெள்ளைவெங்காயம்-
பலம்-1 கந்தகச் சாற்றிற் கருப்புக்கட்டியை
போட்டுப் பாகு செய்து மற்ற மருந்துகள் வறுத்துப்
பொடி செய்து மென்பொடி யாக்கிக் கிண்டி
பத்திரமாக்கி வைத்துப் புளியங் கொட்டைப்
பிரமாணம் கொடுக்க மாந்த, முதுமாந்
சீதமாந்தஞ் ஜெயமாந்தம் வதமாந்தத்தின்-
மேற்

செரியா மாந்தம், வயிறுவலி முதலானதுந்
தீரும். கைகண்டது.

வேறு எண்ணெய்.

முள்ளிவேர், பழம், பாசிவேர், கோழி-
யவரைவேர், சித்தாமுட்டிவேர், செப்புநெருஞ்சி
வேர், சிறுபுள்ளடிவேர், நரிப்பயற்றம்வேர்
துவசி முருங்கைவேர், குதிரைவாலி, இலை-
முட்டமண், திகரைவேர், நெருஞ்சிவேர்,
யாம்பூதன் வேர், நறுவிளிப்பட்டை, உதியம்-
பட்டை, கருவேலம்பட்டை, வெள்-
வேலம்பட்டை, குடவிளாப்பட்டை,
165. மாதளம்பட்டை, கத்தாளைச்சருகு,
வன்னைத்தி, தென்னங்குரும்பை, பிரந்தை-
பட்டை, நாவல்ப்பட்டை, தனைச்சிப்பட்டை
கடுக்காய், வசம்பு, பூண்டு, ஈருள்ளிக்காயம்
வெங்கப்பட்டை, தென்பசுப்பு, யோனம்
கிராம்பு, ஜாதிக்காய் வகை - வராகனிடை - 1
பட்டைவகை - பலம் 4, விளக்கெண்-
ணெய் படி - 1 நண்ணக்கொடுத்து வாட்டிச்
சாறு பிழியவும். வசம்பு அடுக்கு கூட்டவும்.
வெள்வெங்காயம் வைத்துப்பக் கூட்டவும்.
யெண்ணெ பொரிக்கவும். வெய்யலில் நாலு
புடம் வைக்கவும். மாந்தகணந் தீரும்.

கண்டாத்திரி ரசாயனம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, சித்தரத்தை,
சீரகம், கொத்தமல்லி, ஏலம், அன்ன~~[illegible]~~
வெங்கப்பட்டை, ஜடாமாஞ்சி, அதிமதுரம்,
கோஷ்டம், அக்கிராகாரம், தாளிசை-
பத்திரி, சந்தனம், மூத்தக்காசு, வாய்-
விளங்கம், சிறுநாகப்பூ, முந்திரிகைப்-
பழம், பேரிச்சம்பழம், கிராம்பு, சாதிக்காய்-
சாதிபத்திரி வகைக்கு வராகனெடை-3,
மேல்புரண் தீவின பாஞ்சி-பலம்-3
அ. பாஞ்சியைக் காயப்போட்டு பசுவநெய்யை
விட்டு வறுத்தெடுத்து மற்ற மருந்துகளையு-
மிடித்து வஸ்திரகாயஞ் செய்து நன்றாய்க்
கலந்து [illegible]ப் பாகுயில் சீனிச்சக்கரை
கலந்து வைத்துக் ~~[illegible]~~ ~~[illegible]~~ கொள்ளவும்
யாதுக்கு அனுப்பானந் தாளிசைபத்திரிவடக்
...பலம்-1கி, தேசாபுரம்-பலம்-1,
தாளிசபத்திரி-பலம்-1கி, ஏலம்-பலம்-1கி, ஏலம்-
சுக்கு-பலம்-1வ, மிளகு-பலம்-கி, அரத்தை-பலம்-
பலம்-கி, கிராம்பு-பலம்-கி, அரத்தை-பலம்-
பலம்-கி, கிராம்பு-பலம்-வ, சைவியம்-
1கி, வாய்விளங்கம்-பலம்-வ, சைவியம்-
1கி, வாய்விளங்கம்-பலம்-1 யிவை பாகுத்துச்
பலம்-வ, சீரகம்-பலம்-1 யிவை பாகுத்துச்
சர்க்கரை பலம்-20 பாகு செய்து பாகுத்தி-
தாளைப்போட்டுக் கிண்டி பத்தின் பின்னை
... போட்டு வைத்துக் கொண்டு

காலைமே மூன்று காசிடை கண்டங்கத்திரிச்
சூரணம் சாப்பிடவும். சாயுங்காலத்துக்குத்
தாளிசச் வில்லை சாப்பிடவும். இதில்
உஷ்ணாங் கண்டான் வில்லையை நெய்யில்
கொள்ளவும். சேஷ்டம் மிருத்திக் கண்டான்
வில்லையைத் தேனில் கொள்ளவும்.
166. இதுக்குத் தீரும் வியாதி - அஜீரணம், பாருள்
சுவாசம், வரட்சி, வாய்வு, பசியில்லாதிருக்-
கிறது, பித்த சிலேற்பனத்திலே பிறந்த
வியாதிகள் தீரும். [illegible].

புருஷன் கூட வாகாதிருக்கப் பெண்
பிள்ளைகளுக்கு மருந்து.

வெலிப்பருத்தி யிலையையும் இலைக்கள்ளி-
யிலையையும் கசக்கி யுடம்பிலே தடவவும்.
ஆசைப் பயப்பட்டு வரும்.

வேறு — சேராத புருஷன் பெண்சாதி
சேருகிறதுக்கு

சூரியகாந்திப் பூச்சமூலமும் ஆவரைப்-
பூடு-1 விதை சீரகத்தில் மயிற்றுன்ன வசம்பு
இவையெல்லாங் கூட்டி நருக்கி புருஷனுடைய
சிறுநீரில் நன்றாய்ப் பிசைந்து பெண்சாதி
மூக்கிலேயும் பட்டு தலைமேலேயுந் தேய்க்கவும்
~~பெண்சாதி சிறுநீரிலே புருஷனுக்கு மருந்து~~

பெண்சாதி சிறுநீரிலே புருஷனுக்கு மீந்தப்படி செய்கிறது. யாப்படி மூன்று நாள் செய்கிறது. பத்தியம் - கைப்பு புளிப்பு தவிரவும். புருஷனை பெண்சாதி சேருவார்கள்

அ. ஆண்பெண்டு அசந்து போறதுக்கு.

யானைவெண்ணீரில் வாழை விதையை அரைத்து யானை வயத்திலச் அப்பிப் பூசவும்.

✓ வேபனத்துக்கு.

அமுக்கிறாக் கிழங்கும் - உருந்து எடை - தண்ணீர் விட்டான் கிழங்கும் பசுவின் பாலிலே அரைத்துக் குடிப்ப ராத்திரிக் காலத்திலே கொடுக்கவும்.

✓ வேறு.

சுத்திராப்பழம் - விராகனிடை - 1, திப்பலி - விராகனிடை - 1, தேத்தாம்பழத் தோடு - விராகனிடை - 1 யாது மூன்றும். பனைவெருப்பாய் வந்தும் பொடிசெய்து வெண்ணையிற் கலந்து மூன்று காலமே தின்னவும். வேபன முண்டாம்.

பவுந்திரத்துக்கு.

நிலவாகை சமூலம் நிழலுலர்த்தி மறுநாள் வெய்யிலுலர்த்தி பொடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொண்டு மூன்று விராகனிடை தினந் தேனிற் காலமே பத்து நாளைக்கு கொள்ளவும்.

உடம்பைக் கண்டால் நெய்யைக் கொள்ளும்
பிரகிருதி - முகத்தைக் கண்டால் தெண்டுநாள்
167. வெட்டு காப்பிடவும். புண்வாயின் வாழைப்-
பழத்தை வைத்துக் கட்டவும். புண்ணுக்-
குள்ளே மருக்கிற பூச்சியெல்லாம் வெளியே
வரும். மாப்பழ பத்துனாக் கட்டவும்.
பத்தியம் - கிரந்திப் பண்டும் அவபத்தியமு-
மாகாது. மற்றது கூட்டவும். இந்த பழந்-
திழுந் தீரும்.

இந்த வீக்கத்துக்கு.

பசுவின் வெண்ணெய் தின்னத் தொக்காமாய்
யேலம், லவங்கப் பட்டை, மஞ்சள், தெண்பழு
வகைக்கு விராகனிடை - 1 கூட்டி வெண்-
ணெயைப் போட்டு பொரித்துப் பத்தியின் வழுத்
இந்த வீக்கத்துக்குப் கோழி மாமிசம் தடவவும்.
பத்தியம் - கடுப்பன் பண்டந் தவிர்ப்பும். இந்
பன்னை களுக்கு மாறு கை கண்டது.

கண்ணக் கிரந்தி முகன் இந்த புண்ணுக்கும்.

நல்லெண்ணெய் - படி - 4 ½, ஊமத்தம்
வேப்பட்டை அரைத்து சாந்து எழுமிச்சம்
காயளவு - ஆ வசம்பு ஒரு சேர், வெள்ளெருக்கம்
ஒற்றைப் பூடு - 3 இவை நறுக்கி எண்ணெயிற்
போட்டு முறை கொதிக்கிற போது

அ. முதிர்ந்த பருமல்லாமல், யிளம்பருவமல்லாமல்
நடுப்பக்கத்திலிருந்து வைத்துக் கொண்டு
கோழியானால் தேய்த்துத் தடவ யாப்படி
அஞ்சாறு நாள் செய்யக் கன்னக்கிரந்தி,
கண்டமாலை, பிளவை, வீக்கம், ஆறாதபுண்,
பவுந்திரம் இவைதீரும் கைகண்டது.
இந்த வெண்ணெ தன் வெள்ளெண்ணையா-
யிருக்க வேணும். வேறு கலப்படமானது.
நல்லெண்ணெ பழகின கலசத்தில்
வைத்துக் கொண்டு அரையாப்பு, ஆடைவாழை,
பல்புத்து யாவுக்குமாம்.

தாதுபுஷ்டிக்கு.

புனைக்காலி விதையும் நிலப்பனைக்கிழங்கும்
சூரணம் செய்து சர்க்கரை கலந்து பசுவின்
பாலிற் கொள்ளவும். தாதுவர்த்தனை யுண்டாம்.
பெலனுமாகும்.

சூதகவாய்வுக் கட்டுக்கு.

வெள்ளாட்டுக் கோமயம் படி-3 வசம்பு-
சூடம், மஞ்சள் வகைக்கு பலம்-3, திப்பிலி-
பலம்-2 யிது நாலும் யருபது னாள்க்
கோமயத்தி லூறப் போட்டு மறுபடி யெடுத்து
அரைத்துப் புன்னைக்காயளவு பத்து நாள்
168. கொண்டு நேரமுண் கொள்ள சூதகவுக் கட்டு
யிருந்தது கரையும் கண்டது.

சூதக வாய்வுக்கு, தாளிசபத்திரி சூரணம்.

தாளிசபத்திரி - துட்டிடை - 1, மிளகு - துட்டிடை - ௨, சுக்கு - துட்டிடை - 3, திப்பிலி - துட்டிடை - 4, மூங்கிலுப்பு - துட்டிடை - 5, லவங்கப்பட்டை - துட்டிடை 8 யிவை ஒட்டிடை யிடித்து வஸ்திரகாயஞ் செய்து யிதுக்குச் சர்க்கரை துட்டிடை - 3௨ ஒட்டிக் கலந்து வேளைக்கு வெருகடிப் பிரமாணங் கொள்ளவும். இரண்டு வேளை தின்ன சூதக வாய்வு, பசி தீபன முண்டாகும். பயத்திய வெட்டடை,

பெருவாயன் எண்ணெய்

பெருவாய னாகிற கிழத்தை வெட்டி யிட்டவுடனே முகர்ந்து பார்க்கங் காட்டி- யும் எடுத்து எண்ணெயிலே போட்டு வெயிலிலே சூரியபுடமாக காய வைத்து உச்சியிலு மேலுமிட்டு இருக்க வீக்கமாறும்.

கிரந்தி பலத்துக்கு

நீர்வெடி முத்து, கருஞ்சீரகம், நேர்வாளம், நெல்லிக்காய்க் கெந்தகம், யிரதச் சேங்- கொட்டை, வாலுளுவை அரிசி, மிளகு நுணக்கி மஞ்சள் சிறு குறட்டை வேர், கொடிவேலிவேர்,

மிளகு சாரணைவேர், அப்பைக் கிழங்கு-
சிறுசடைச்சி வேர் யிவை கடை மருந்தின்
வகைக்கு விராகனிடை-3, வெட்டு மருந்தின்
வகைக்கு விராகனிடை-4 ஆக யிவை-
யெல்லாம் பொடி செய்து ஒருபடி விளக்-
கெண்ணையைப் போட்டு பதத்தில் எரித்து
யருந்தினாலும் நன்று. அல்லது கிரியைபட-
மாகிலும் நாலைந்து நாளிகை யருந்த
பாகு யெடுத்து வியாதிக்குத் தக்கது
மூணுநாள் அஞ்சுநாள் யேழுநாள் நேரத்தில்
ஒருதுட்டத்தினை யாகிலும் ஒரு சிறு
கரண்டி யளவாகிலும் ஒரு காசிடையாகிலும்
கண்டு கண்டு செய்யவும். பத்தியம் - வியாதி
தீருமட்டும். உப்பு முதலானது. மறு பத்தி-
யத்தின் புத்திக்குத் தக்கது பார்த்துக்கவும்.
169 யாதுக்குக் கிரந்தி கணமும் அரையாப்பு
பவுத்திரம், இவை முதலானதுந் தீரும்.
கைகண்டது.

மலைவாங் கட்டுப்பட்டான்

சாரணை வேரின் உப்பும் புளியும் பிசைந்து
வேரினே தடவி நாலைந்தினம் அபாணவாயி-
லேத்தவும். மலம் பிழக்கும்.
சலமடைத்தால் - நெருஞ்சிக்காயம்

வெள்ளரி விதையும் குடத்தில் தெளிம்பும்
எலிப் புழுக்கையும் அம்மியில் வைத்து
விழுது பட அரைத்துக் கீழ்வயிற்றிலே
தடவவும். நீரிறங்கும்.

விப்புருதிக்கு.

உதியங் கொழுந்தை வைத்துக் கட்ட~~டு~~-
லாம்.

ஈரவெங்காயத்தில் கள்ளிப் பாலுங்
கூட்டி நசுக்கி வைத்துக் கட்டவும்.

கள்ளிக் கொம்பு நுனியை நசுக்கி முறித்து
நசுக்கி வைத்துக் கட்டவும்.

வயிற்றுக் கடுப்புக்கு.

யனவம் பிசின் களிப்பாக்கு, காசுக்கட்டி,
கருங்குங்கிலியம் யனை ஆக்கப் பொடி
செய்து எருமைத் தயிரிற் கொடுக்கலாம்.

உதியம் பட்டையைப் பந்து போலே திரு
மோர் விட்டுப் பிசைந்து இரண்டு காலே
கால்ப்படி தண்ணீர் சாப்பிடவும். தீருங் -
குருதுங்கள்.

வயத்தின் நோய் இருபத்தொன்றுக்கும் பேர்
அதுக்கு ஔஷதம்.

வயிற்றின் நோய் வகை- வாதகுன்மம், வலி-
குன்மம், எரிகுன்மம், நக்காளக் குன்மம்

அவ்வாந்திக் குன்மம், சேட்டுமகுன்மம்,
சத்தி குன்மம், பித்த குன்மம், சோகை,
இரைப்பை, நீராமேகம், நீர்க்குறை, பெரு-
வயிறு, குடல் விப்புருதி, அழலை, வெப்-
புப்பாளை, குடல்வாதம், எதிர்க்கவிழ்ச்சி,
ஈளைநோய், சோகை, பழுவடைக்கிளினை
குடல் விப்புருதி ஆக இந்த இருபத்தொரு
வியாதியும் தீருகிறதுக்கு மருந்து –

சித்தவடைக் கிழங்கு, சிறு குறிஞ்சாவேர்
ஒருவம்வேர், நன்னாரிவேர், பெருமருந்துவேர்
அவ்வைக் கிழங்கு, ஆதண்டம்வேர், அழிஞ்-
சில்வேர், பிராயவேர், காட்டுமல்லிகைவேர்,
சாரணைவேர், சத்தி சாரணை, முக்கரட்டை-
வேர், உத்தமதாளிவேர், கொடிவேலிவேர்,
செங்கத்தாரிவேர், மிளகு சாரணைவேர்,
170. நத்தைச்சூரிவேர், தாளக்கொடிவேர், சிறு-
குறட்டைக் கிழங்கு, கடைச்சுக்கு, மிளகு,
வேர்க்கொம்பு, வெங்காரம், உள்ளிப்பூடு,
கருஞ்சீரகம், சன்னராசனைக் கடுகு,
இந்துப்பு, நேர்வாளம், குடப்பாலை, சீனக்-
காரம், சவக்காரம், கல்லுப்பு, சேங்கொட்டை
ஆகக் காட்டுமருந்து கடை மருந்தெல்லாம்
சமன் எடை கடைமருந்து வேறு – காட்டு-
மருந்து வெவ்வேறு நெக்கிக வறுத்துப்

பொடிசெய்து ரெண்டு மொன்றாய்க் கொண்டு
கலந்து வைத்துக் கொண்டு நேரத்துக்கு
வெருகடி பிரமாணம் ரெண்டு நேரமுங் கொள்ளவும்
மருந்து சாப்பிடுமுன்னே பனங் கருப்புக்கட்டி
தின்னவும். பிறகு வெருகடி மருந்து சாப்பி-
டவும். பத்தியமாய் இரவும். இதுக்கு முன்
சொன்ன வியாதியெல்லாந் தீரும் கைகண்டது.

காதிரைப்புக்கு மருந்து.

தேத்தாங் கொட்டை, பூவந்திப்பழம்,
சேங்கொட்டை, மிளகு, உள்ளி, வசம்பு,
கூட்டி நல்லெண்ணையில் வேகவைத்துக்
காதில் பிழிய மாறும்.

அ.

கபாலக் குட்டத்துக்கு.

கள்ளிக் கொம்பு நறுக்கி தீயிற் போட்டு
உமிக்காந்தலிலே புதைத்தெடுத்து நாளிச்சாறு
பிழிந்து ஆமணக்கெண்ணையை வார்த்து
ப[illegible]துப்பு, கெந்தகம், குந்திருக்கம், மஞ்சள்
சந்தனம் இவை ஒரொன்றுக்கு விராகனிடை
உ பொடிசெய்து முன்னெண்ணையா விட்டுப்
பதத்தில் வடித்துத் தினையாவும் பூசிக் காதிலும்
பூசவும். கபால குட்டம் மாறும்.

அரையாப்புக்கு.

எருக்கிலங்காய் பழுத்து உமிக்காந்த-லிலே வெதும்ப வைத்து கில்லுப் போட்டுக் கட்டவும். கைகண்டது.

கிரையெண்ணெய்.

சாணிப்பால் - நாழி, வாழைமட்டைச்-சாறு - நாழி, கோவையிலைச்சாறு - நாழி, சுரிசு - நாழி, ஈ.ரவெங்காயச் சாறு - நாழி, விளக்-கெண்ணெ - படி - 1 இவை கூட்டி எரித்து மெழுகு பதத்திலிறக்கிக் குழந்தைகள், பெரிய மனிதர் யாவர்களுக்கும் அந்தந்தப் பிரமாணம் மதிந்து கொடுக்கவும். கிரி வைப்பெல்லா வெளுக்கும். யாதுக்கு மேருஞ் சொறிந்து கொடுக்-கவும். கைகண்டது.

171. ## கிரந்திக்கு.

தேத்தாங்கொட்டை - 7, ஆவாரைமொட்டுப்-பருப்பு - விராகனிடை - 1, கவிராயருக்கிறு-தனைமான் கொம்பு, நெருத்த வழுத்து, தாச்-சிக்காய் அளவு யாந்த முள்ளு வகையுந் சுந்தனை முறைக்கிறாப்போலே உரைத்து வேறே வைக்கவும்.

வேலம் - பலம் - 1, சீரகம் - பலம் - 1 யாந்த நெண்டும் நேகவரைத்து

ரெண்டுமொன்றாய்க் கூட்டி முன் வைத்ததை
யிதிலே சேர்த்து நன்றாய் ரெகித்து யெருமிச்-
சாப்காயனை பசுவின் வெண்ணையைக்
குழப்பிக் காலமே யெழுநாள் தின்னவும்.
யிதுக்குப் பத்தியம் - வெண்ணீருஞ் சாதமும்.
மோறும் பத்தியமுமப்படித் தான். யிது கைகண்டது.

குடல்ப் புருவனுக்கு.

முருங்கையிலையைத் துவைத்து சிறுநீரு(ம்)
விட்டுப் பிழைந்து இருத்தி ~~படி~~ இ படி-
வாறு படி கொடுக்கவும் தீரும். கண்டது.

பிரமியத்துக்கு

எருக்கலம்பூவும் அதின்னரும்பும் அரைச்சு
சாந்து போக்கனை தொட்டாவச்சியிலே வைத்து
அதில் பசுவின் பால் கறந்து நுரையடங்கி
முன்னே கொடுக்கவும். யிப்படி மூன்று வேளை
மூன்று நாள்ச் சாப்பிடவும். தீரும்.

சிறுபிள்ளைகள் வாய்ப்புண்ணுக்கு.

கத்தாளத் தோலு ரெண்டு எருமச்சாய்
பிரமாணம் - கடுக்காய் ஒன்று பொடி
பண்ணிப் போட்டுப் பிழைந்து தெளிவாயிருத்திக்
கொடுத்து வரவும். வாய்ப்புண், வயிற்றுப்புண்,
தெரிகண்ட புண்ணெல்லாம் இணைமாம்
கைகண்டது.

இருவையாதியின் பேரில் கருப்புக்கு.

விர்வளை யிலை ரெண்டு இத்து யிலையைக் கருக வறுத்து அதிலே வெந்தயம் பொரித்துக் கொட்டிக் கொண்டு மறுபடி ரெண்டு வகையும் போட்டு ரெண்டுபடி தண்ணீர் விட்டு. இப்படி யாய்க் காச்சிக் கொடுக்கவும். மெத்த பேதியாம். பயப்பட தேவையில்லை.

நுவந்திப்புழுத்த தேள் - பலம்-3 வறுத்துப் பொன்னிறமான வாரை யெடுத்துப் பொடி பண்ணி விளக்கெண்ணையில் போட்டுக் கிளறி தையலிலே வைத்து விக்கத்துக் - கொள்ளலாம் போடவும்

பிள்ளைகள் கக்குவானுக்கு.

விளக்கெண்ணை, நல்லெண்ணை புங்கெண்ணை, யிலுப்பெண்ணைய் - வகைக்கு படி-வ, பெருங்-கொன்னைப் - பட்டை - பலம்-1, வசம்பு -1 யாது ரெண்டையும் முன் அந்தெண்ணையில் போட்டெரித்து வைத்துக் கொண்டு நாக்கில் ஒரு காசிடை தேய்க்கவும், மூன்று நாளைக்குத் தேய்க்கவும். யேழு நாட்களில் குணமாம்.

கருப்புறப்படுகிறதுக்கு முன் கொடுக்கிறதுக்கு.

கருவுக்கு முன்னே காச்சலடிக்கிற போது நத்சூரப் பரிச்சான் வேர், பனைவேர் ஏ-ரு- வெங்காயம், அருகம்வேர், நெல்லு, பனை- வெல்லம், முத்திருக்கஞ் செவி யாதுவகைக்- குப் புளியங் கொட்டையளவு சாந்து வழித்து ஒருமிக்கச் சேர்த்து வழித்து மத்திச்சு ஒரு போது கொடுக்கவும். ரெண்டாவது தரங் கொடுக்க வேண்டாம். கருமைதுவாய்ப் போகும்.

கருங்கிரந்திக்கு யெண்ணெய்.

கோரோசனை - விராகனிடை - ௨, பூவந்திப்- பழம் - விராகனிடை - ௩, வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், புங்கெண்ணெய் வகைக்கு படி - ௧, ஆவரிவேர், அவிஞ்சி வேர்ப்பட்டை, கருநொச்சி, நத்தைசூரி- வேர், நிலக்குமிழ் வேர், அங்கம் வேர், சங்கங் குப்பி வேர், வகைக்கு பலம் - ௩, வெள்ளருகு - பலம் - ௩, கிரந்திநாயகம் - பலம் - ௩, கஸ்தூரி மஞ்சள் - விராகனிடை - ௩, கருஞ்சீரகம் - விராகனிடை - ௩, செங்- கொட்டை - விராகனிடை - ௨ யாதுகளெல்லாம் உடச்சு சூரியபுடம் வைக்கவும். வியாதிக்கு

தக்கது பத்தியமானாலே கண்டு கண்டு
கொடுக்கவும். பத்தியம் - புளிப்புகையிலை
மாமிசம் பத்து நாளைக்கு ஆகாது.

கொற்பிணி மேல்கண்ட நோய்களுக்கு.

கொற்பிணியா யிருக்கையிலே காலையில்
தண்ணீர்த்தாகம் - அதற்கினாலே உணர்ந்து
173 பிள்ளை பிறந்து நாலுநாளிருந்து உடம்பு
கத்தரிக்காய் போலக் கன்னி சாபிள்ளை
சாகிறதுக்கு மருந்து - சிற்றாமணக்கு வெண்ணை
நாவியின் சீர வெங்காயச்சாறு - 2, செங்-
கத்தாரிவேர், பரங்கம்வேர், செழுமுத்தொவ-
றைவேர் + சங்கம்வேர், அப்பைக்கிழங்கு
அவுரியிலை, காட்டுக்குறிஞ்சாவேர் - அப-
பம்பலை, மின்னிக்கிழங்கு, சங்கம்-
குப்பா சூரணம், கடைச்சுக்கு - கருஞ்-
சீரகம், கம்பப் பசின், நெல்லிப்பருப்பு,
வசம்பு, வெந்தயம், நற்சீரகம் யவை-
யெல்லாஞ் சிட்டம் பார்த்துக் கூட்டி அரைத்து
அரைத்து எண்ணையுங் கூடக் கலந்து
பத்தி வைத்து வடித்து அந்தி சந்தி இரண்டு
நேரத்துக்கும் ஒரு கரண்டியாக ஒன்றுவிட்-
டொருநாள் அஞ்சுமுறை யெழுமுறை கொள்ள-
வும்.

இப்படி ஐந்து மாதத்தில் ஏழு மாதத்தில் யாதொப்படி சாப்பாடவும். பிள்ளை பிறந்து சாகாமல் நன்றாயிருக்கும். யிதுக்கு பத்தியம் - கைப்பு, புளிப்பு, கிரந்தில் பண்டம் தவிரவும். தீரும்.

தண்ணி, வலிப்பு, பீனிசம், நாசியில் சிறாய் வழுகிறது, ரத்தம் விழுகிறது இதுக்கு நசியம்.

திப்பலி - பலம் - ௩, சுக்கு - பலம் - ௩, மஞ்சள் - பலம் - ௩, வெள்ளைவெங்காயம், இந்துப்பு - 1, மிளகு - பலம் - ௩, புகையூறாகிற ஒட்டடை - பலம் - 1 இவை கண்டங்கத்திரி பழச்சாறு விட்டரைத்து அந்தச்சாறு அரைப்படியில் அரைத்த மருந்தைக் கலக்கி வெள்ளைச் சீலையை பாளம்பாளமாகக் கிழித்து அதிலே தோய்த்து நிழலுலர்த்தி யாதொப்படி முறைதீரும் தோய்த்துலர்த்தி ~~௩~~ நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு அந்தந்த வியாதிக்கு வேண்டுவிதகளத்துக்கு ஒரு சீலையைக் கிழித்துத் தண்ணீரில் பிசைந்து நசியம்விடத் தீரும். தலைப்பின் எழுதியிருக்கும் வியாதிகள் தீரும். யிதுதவிர தலைவலி மிகுதிக் கண்டால் உச்சந் தலையில் தாந்தானையைப் பிழிந்துவைத்து கட்டத் தீரும்.

சன்னி முதல் சகலத்துக்கும்
174. ## நசியம்.

வெள்ளை வெங்காயம், இஞ்சி, கஸ்தூரி, கோமூத்ரம், சுக்கு, மிளகு, திப்பிலியும் நேர்வாளம் யாதுமொன்றாக சமனெடு பேய்ப்பீர்க்கன் சாறுவிட்டரைத்து உண்டை செய்து நிழலுலர்த்திக் கொண்டு ஜுரம், பேய்ச்சன்னி, பயித்தியம், முறை வெதுப்பு காச்சலிதுக்கெல்லாம் ஒரு உண்டை வெள்ளைச் சீலை துணியில் வைத்து வெந்நீர் விட்டுப் பிசைந்து மூக்கு செவியில் பிழிய விட்டும் ஓடும் வியாதிகளே. கண்டது.

நசியம்

பெருத்த பாம்பினுடைய வேதை மனிதர்கள்
முருக்கனுக்கினை தும்பையோ டிந்துப்பு
நெருக்கி யொருதுளி நாசியில் தான்விட
யாருக்கு மிடம்விட் டேகுமென்று தான்சொல்

சிறுபுள்ளைக் கட்டி - துட்டெடை - 1, சீர-
வெங்காயம் - துட்டெடை - 1 யாதுமொன்று
மறைத்து ஆண்பிள்ளைக்கு - பெண்பிள்ளை
பெற்றவள் முலைப்பாலில் - பெண்பிள்ளைக்கு

ஆண் பிள்ளை பெற்றவளின் முலைப்பாலில் அரைத்து நசியம் பண்ணவும் – இப்படி நசியம் செய்ய சன்னி, பாவக்க வலிப்பு, பித்தம், வைத்தியம், தலைவலி, விஷமுதலானது தீரும் கைகண்டது.

கலிக்கம்

சாதிலிங்கம், பொன்னரிதாரம், சுக்கு, மிளகு, கடுகுரோகணி இவைகள் சமன் கூட்டி பச்சை முந்திரிகைப் பழச்சாறு விட்டரைத்துக் கலிக்கம் செய்து நிழலுலர்த்தி முலைப்பால் ஆரைத்தி ஒருபக்கத்திலிட ஒருபக்கம் அடங்கிவிடும். இரண்டு பக்கத்திலிட இரண்டு பக்கமும் அடங்கிவிடும்.

175. ## மேகத்துக்குச் சுபாபதிச் சூரணம்

நாவல்பட்டை – பலம் – 5. அத்திப்பட்டை பலம் – 4, காசுக்கட்டி – பலம் – 6, தென்னம்பாளை – பலம் – 3, கருவேலைப் கிழங்கு – பலம் – 1, அரக்கு – பலம் – 3, அபின் – பலம் – ஆ இவை கூட்டி இடித்து காலமே ஒரு விராகனிடை பிரமாணம் கொள்ளத் தீரும் வியாதி – ரத்தபேதி, யோனிரோகம், வெள்ளை குறைந்து போறது,

வெள்ளை விழுகிறது பெரும்புருக்கி,
பெரும்பாடு, புழுக்கடி யாவை தீரும்.

தீய் மேகத்துக்குக் கஷாயம்.

ஆவாரம் விதை படி-வ சட்டிகாய-
வைத்து அதில் நல்ல மணலைப் போட்டு
சிவக்க வறுத்து மணலைக் கொட்டிப்-
போட்டு உடனே ஆவாரம் விதையைப்
போட்டுப் பொன்னிறமாக வறுத்து ரெண்டு-
படி தண்ணீர் விட்டு அரைப்படியாகக்
காச்சி மருத்துக் கொடுக்கவும்.
இப்படி வியாதிக்குத் தக்கது மூன்று-
நாள் ஆறு பொழுது குடிக்கவும். மதுக்கி
வயிற்றுக் குள்ளே மேகத்தினாலே மருக்கிற
புண்ணு மாறிப் போகும். கைகண்டது.

குன்மம் பதினெட்டுக்கும் துட்டு பாகம்.

குன்மத்துக்குத் துட்டுக் காசு வராகனெடை-1
தகடுதட்டி வைத்துக் கொண்டு நெல்லிக்காய்
கெந்தகம்-வராகனெடை-1, 3அம்-வராக-
னிடை-1, கல்லுப்பு உரியாலே நாக்கம்
பாம்பு போட்டு ஊற விட்டு அந்தத்
தண்ணீரில் விட்டு மது ரெண்டு மந்த்

தண்ணீர் விட்டு அரைத்துத் தொடு அத்தி-
பண்ணி அதின் மேலே மத்திச் சுடப் பூசி
செப்பன் வைத்து சீலைமண் செய்து
புடம்போட பற்பமாம். அதின் பணவிடை
பற்பமெடுத்து வெள்ளைவெங்காயம் - நல்ல-
வெல்லம் - ~~பழந்தி~~ பழங்களிலே கொடுக்க
குன்மம் ~~பறந்தோ~~ பறந்தோடும் ~~தீ~~ தீரும்.
கைகண்டது.

சுக்கு அசமோதகம் துவர்ப்பு வெண்காரம்
மிக்க பருத்தன் வெள்ளுள்ளி கூட்டியே
176 நெக்கவே அரைத்து உண்டிடின் மந்தமும்
பக்க வாய்வும் குன்மமும் மாறுமே.

பல் ~~பு~~ பூச்சிக்கு.

கண்டங்கத்திரிப் பழத்தை உமிக்காந்தலி-
லிட்டுப் புகையைச் சுற்றிவைத்து
நல்லெண்ணையைப் போட்டு இரவு புடம்
வைத்துப் பல்வலிக்கு பிறாவணித் தடவ-
வும். தீரும் ~~~~ கை கண்டது.

கிரந்திக்கு

மிளகு - ஒருபடி, வெள்ளுள்ளி - ஒருபிடி,
கன்மணிக்கொடிக் கொழுந்து - ஒருபிடி
ஆழாக்கு நல்லெண்ணையா லரைத்துக்
இருப்பு - பாப்பு அஞ்சு நாள்க் கொடுக்கவும்.

இதுக்குப் பத்தியம் - காலமே நல்லெண்-
ணெய் வார்த்து அசனம் பண்ணவும்.
மிளகு பொடி கூட்டவும். பத்தியம்
வேறொன்றுமாகாது. கைப்பு, புளிப்பு,
உப்பு, குளிர்ந்த தண்ணீர் யருவது
நாட்களுக்கு ஆகாது. தீரும் வியாதி-
கிரந்தி நோய், சூலை, கைகால் முடக்கு,
சந்துவாதம் பிடிக்கிறது, உடம்பு வெடித்துக்
கட்டின சூலைகள், வெடித்துப் புழுத்த
சூலைகள், வரட்சி சூலை, வாத சூலை,
குஷ்டங்கள், மற்ற கிரந்திகள், கழுத்துவாத-
சூலை, கபால சூலை, உடம்புக் கடுப்பு,
மண்டை நோவு, பிரமேகங்கள் மற்ற
யெண்பத்து நாலுந் தீரும் கைகண்டது.

ஆறாத புண்ணுக்கு.

எலுமிச்ச யிலை - வேம்பு யிலை வைத்து
கட்டி தினமொரு யிலை யெடுத்துப் போட்-
டுக் கட்டவும்.

முசுக்கந்து யிலை வேம்பு யிலை வைத்துக்
கட்டி தினமொரு யிலை யெடுத்துப் போட்டுக்
கட்டவும்.

~~[illegible]~~

அரம் அனைத்துக்கும்

அக்கி, திப்பிலி, மிளகு, கடுகரோகணி, வெள்ளைக்காயம் வகைக்கு விராகனிடை - ஐ, தும்பைப்பூ ஒரு பாக்களவு தண்ணீர் விடாமலரைத்துச் சுண்டைக்காய் பிரமாணம் உண்டை பண்ணி அதை அரத்துக்குங் கொடுக்கவும்.

அரந் தோஷந் தீர மருந்தான் - உடனே
177 பண்ணி உடனே கொடுக்கவும். தீரும்.
இது கைகண்டதெனக் கருதினார் முன்னோர்.

அரத்துக்கு மாத்திரை.

மனோசிலை, தாளகம், அரிதாரம், மிட்-டையோடு வகைக்கு துட்டிடை - 3 அரைத்து கலசத்தில் புளியம் புரோணித்தான் பண்ணி பரப்பி அதன் நடுவில் மருந்தை வைத்து மூடிப் புடம் போடவும். பாகு வெடுத்து வெந்நீர் அரத்துக்கும் பணவிடை கொடுக்கவும்.

சூதகவலியின் குணம்.

சூதகவலி வந்த போது தெள்வாம் வயாறு வலிக்கும். அதுக்கு முன் பின்னும் வலிக்கும். இதுக்கு சூதகக்கிரோணி யென்று பேராம்.

யாதுமருந்துகளின் தீராதென்றாற்
கஷாயம் — காசிக்காய், அதிவிடயம், கிராம்பு
வகைக்கு விராகனிடை-1 சீரகம் பொட்-
டணங் கட்டி சட்டியின் வைத்துச் சுடவும்.
வசம்பு கருகச் சுட்டுப் போடவும். இந்த
மேல்புறணி நீவி உப்புத் தடவி சுட்டுத்
திட்டிப் போடவும். மிளகெல்லாம்
ஒரு சட்டியிற் போட்டு ஒருபடி தண்ணீர்
வார்த்து எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

மாந்தஇணை ழ்.

மாந்தத்தின் பேரில் லக்ஷணம் வந்தால்
வயறு கழியும். அன்னம் வெறுக்கும்.
நாக்கு பூத்துப் போம். அதின்மேல் விக்கலுக்கும்
வாயுணர்ந்து போம். அதைத் தண்ணிட்டு
தண்ணணச் சுருக்கிப் போடும். உச்சி
குழிந்து போம். யாதுமேல் லக்ஷணம் எண்-
ணாமல் வராது
நாடியவும். யாதுக்குப் பேர்சொன்ன வகாது.

யாதுக்கு எண்ணெய் செய்ய.

அவிச்ச உளுத்தின எண்ணெய் - படி-1,
வெள்ளிலைச்சாறு-
பிணைப்பால் படி-1,
படி-1, கீத்தளைச்சாறு - . நெருஞ்சி
178. யாதுக்குக் கடைச்சரக்கு - அதிமதுரம் ஏலம்,
செங்கழுநீர்க் கோஷ்டம், செண்பக மொட்டு,

சாதிக்காய், வாய்விளங்கம், கோரோசனை, குங்குமம், சாதிபத்திரி, அரத்தை, அக்கி, திப்பலி, திப்பலிமூலம், அக்கிரகாரம், கடுகு-ரோகணி, நெல்லிப் பருப்பு, மஞ்சள், கருஞ்-சீரகம், நற்சீரகம், கிராம்பு, குங்குமம் வகைக்கு விராகனிடை-1 சாதிக்காய்-விராகனிடை-4, கடுக்காய்-10, தேற்றான்-கொட்டை-20 யாவையொன்றாக வெள்ளி-டக் காடி விட்டரைத்து முன் எண்ணெயில் எல்லா மொன்றாய்க் கூட்டி அடுப்பிலே வைத்துக் கொதிக்கும் போது கருவேல-மரத்துப் பிசினை யரைத்து உருட்டித் தட்டிப் போட்டுப் பதத்தின் நிலையிலே வடிகட்டிக் கொண்ட எண்ணெயில் ஒரு விராகனிடை கோரோசனை போட்டு வாய்கட்டி வைக்கவும். இந்த எண்ணெய் பத்துவருஷ மானாலும் இருக்கும்.

இந்த எண்ணெய் கொடுக்கும் விபரம்-கணைத்து மேலே யிருமல் ~~சிக~~ சிக்கினால் நீருமல்லா வேறே யாதொன்று வென்னீர்-விட்டு நசுக்கிப் பிழிந்து. கொண்டு ஒரு கடுக்காய் தட்டி நசுக்கிப் பிழிந்து-கொண்டு ஒரு சங்கு முன்னெண்ணெயிற் கலந்து ஒருநாள் வார்க்கவும்.

ஒருவிசை வாயாலே கோழையெல்லாம்
எடுத்துப் போகும். பிறகு உடனே முலைகொடுக்க
வேண்டாம். வயறு கழிந்தால் முலை
கொடுக்கவும். மறுநாள் கிண்டங்கத்திரி-
யினை, தூதுவிளையினை, பொடுதலை,
துளசியினை யிந்த நாலும் ஒரு படி
ஒருதிப்பலி யிதுவெல்லாம் ஒரு சட்டியிலே
வேடுகட்டிப் புட்டவியலாக அவித்துப்
பிழிந்து அந்தத் திப்பலியுமரைத்துக்
179 கலக்கி முன்னெண்ணெய் அரைச்சங்கும்
யிந்தக் கஷாயம் அரைச்சங்கும் வார்க்க-
வும். யிப்படி ரெண்டுநாள் வார்த்துப்
பிறகு அஞ்சாறுநாள் மேலுக்கு அந்த
யெண்ணெய் தடவி வைக்கவும். காய்ச்சலோடு
கணமிருந்தாலும் நானாவகை வியாதி-
யிருந்தாலும் யிதுக்கு வல்லாரையும்
சிறுபுள்ளடியும் ஒருதிப்பலியும் யிது
மூன்றும் முன்சொன்னபடி புட்டவியலாக
அவித்து நருக்கிப் பிழிந்து அந்தச்சாறு
அரைச்சங்கும் முன்னெண்ணெய் அரைச்-
சங்கும் வார்க்கவும். யிப்படி ரெண்டுநாள்
வார்த்து சாறு மேலுக்குப் பூசவும். வயறு
உதிரினால் பனிரெண்டு கிராம்பு பொடி பண்ணி
வெந்நீரில் கொடுக்கவும்

ஒரு வருஷத்துப் பிள்ளையானால் ஒரு விசை
வயறு கழிந்தால் — அவர்க்கு கொத்தும்,
வல்லாரை ஒரு திப்பிலி, பொடுதலை,
சிறுபுள்ளடி, ஏர்க்கிளை யிதுகள் பட்டிய-
லாக ~~அவித்த~~ சாயம் ஒரு சங்கும்
யெண்ணை ஒரு சங்குமாக வார்க்கவும்.
எண்ணையோடே சுத்த வெங்காயம் ஒரு
பணவிடை கூட்டவும்.

பிள்ளைகளுக்குத் தோஷங் கணம் வந்தால் —
எண்ணையோடே கோரோசினை துவரை
பிரமாணம் முலைப் பாலிலுரைத்துப் போடவும்.
வாயானேயும் வயத்தானேயும் போம்.
தாகமும் உழலையும் பணியுங் காச்சல்
வாந்தி யாதுகள் நிற்கும். கை கண்டது.

வாய்வுக்கு உண்டை.

திரிகடுகு, யிந்துப்பு, பொட்டிலுப்பு,
வளையலுப்பு, கல்லுப்பு, மண்ணுப்பு, வாய்-
விளங்கம், வாலுளுவை அரிசி, பெருங்-
காயம், ஏலம், சீரகம், திப்பிலி மூலம்,
180. சித்திர மூலம், செவியம், நவச்சாரம்,
அவச்சாரம், வெங்காரம், சீத்தியச்சாரம்,
வெள்ளெவச்சாரம், சாதிக்காய், மருள்வேர், வெள்-
ளைச் சாரணைவேர், கொக்கட்டைவேர், வெண்-
காயம், வேளைவேர் — வகைக்கு பலம் - 1

இட்டு புடம் பண்ணி யெடுக்க வெளுக்கும் பற்பமாகும் வெட்டைத்துக்குச் சுண்டைக்-காயளவு உண்டை செய்து அருந்தி மேல் ரெண்டு நேரமும் கொள்ளவும். தீரும்வியாதி-பக்கவாய்வு, நடுமார்பு வலி, இருமை-சூலை, சூதிகா வாய்வு, கழிச்சல், அஜீர், கிராணி, குடல்வாதம், பீலிகை, மூலவாய்வு அஜீரணம், வாந்தி, மகோதரம் யிவை தீரும். தீபன முண்டாம்.

கல்லடைப்புக்கு.

சட்டி காய வைத்து யீரவெங்காய மொரு சேரை அரிந்து அதிலே போட்டு திவக்க வறுத்து ஒருபடி தண்ணீர் விட்டு அரைப்-படியாக வாறு கிண்ணியாலே வார்த்து ~~அதி~~ அதிலே பசுவின் வெண்ணையை எலுமிச்சங்-காயளவு போட்டு உருக்கி அரிவாள் காய-வைத்து அந்தக் கஷாயத்தில் வைத்து ஆற-விட்டு வெங்காரம், பருத்திவிதை பிரமாணம் பொரித்த பொடி பண்ணிப் போடவும். யிந்தப்படி கொடுக்கவும்.

மறுநாள் நெருஞ்சிவேர், கீழ்காநெல்-லிவேர், முருங்கை யீர்க்கு, சிறுபீளை வேர் யளந்து பழுதில்லாமல் பார்த்து வகைக்-கொருபடி - யிடித்துச் சட்டியில் போட்டு ஒருபடி தண்ணீர் விட்டு அரைப்படியாவ

நீர் நன்றாய் விடாதிருந்தால் வெங்காரம்
பயாரை பொரித்துப் பொடிபண்ணிப் போடவும்.
181. நீர் விடாதிருந்தால் மேற்படி அந்த
நாட்களுக்குக் கொடுக்கவும்.

ஜுரக்கிராணிக்குக் கஷாயம்

நிலவேம்புக் கீழ்க்காய்நெல்லி சாந்து பெய
அன்னடைக்காய் பிரமாணம் முளைப்பாலின்
மூணுநாள் கொடுக்கவும்.

சகல மாந்தங்களுக்கும் கஷாயம்.

பொடுதலை வேர்க்கு, ~~வீசு~~ புளிவேர்க்கு, நுணா-
உத்தாமணி வேர்க்கு, வேப்பவேர்க்கு, மாவேர்க்கு வாதுமை
வேர்க்கு, நொச்சிவேர்க்கு, கடைமருந்து-
அமன் கட்டித் திட்டிப் போட்டு திப்பிலி புடமிட்டு
சூடம், வெள்ளைவெங்காயம்,
அமன் கட்டிக் கொண்டு வாளித் தண்ணீர்
வார்த்து ஆழாக்காய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.
யாதுக்குத் தீரும் வியாதி- உளவு மாந்தம், வெ-
மாந்தம், சையோமாந்தம், சத்தி மாந்தம் வாத
மாந்தம் முதலான மாந்தமெல்லாந் தீரும்.

பிரமேகத்துக்கு.

வாழைப்பூ பாதித்து பணவிடை வங்க
.... நல்லெண்ணெய் கூட விட்டு
மூன்று நன்றாய்ச் சேர்த்து மூன்று பொழுது
கொள்ளவும். தீரும்.

.... அஜீத்துக்குக் கஷாயம்.

சுக்கு, வெந்தயம், சீரகம், கிராம்பு, இலவங்கப்-பட்டை, நிலவேம்பு .... சித்தாமுட்டி, பற்படாகம், கரிசலாங்கண்ணி யாவு வகை-யெல்லாம் கஷாயம் போட்டு அனுப்பான மாத்திரை வைத்துக் கொடுக்கவும்.
பத்தியம் — புளி, புகையிலை ஆகாது.

கபால குத்தை வரப்பீனிசம் இதுக்கு தைலம்.

நல்லெண்ணெய் - படி - 3, பசுவின்நெய் படி-1, பசுவின்பால் - படி - அரை, இளநீர் படி - அரை, ஆதண்டைவேர், சிறுக்கீரை சமூலம், பூனை-யணை, நெல்லியணை, கரிசலாங்கண்ணி பொன்னாங்காணி நரிப்பயற்றங் கொடி முசுமுசுக்கை, தண்ணீர்விட்டான் கிழங்கு யாவு வகைக்கு அரை படி-க - கடைச்சரக்-கிச்சிலிக் கிழங்கு - பலம் - ௩, சண்பக-அரும்பு - பலம் - ௩, கஸ்தூரி மஞ்சள் - பலம் - ௨, ஜடாமாஞ்சி - விராகனிடை - 1, கார்போக-அரிசி - பலம் - ௨, வெப்பாலை அரிசி - பலம் - ௩ யவை பொடி செய்து கூட்டிப் போட்டு ஆறு-வகையுங் கூடவிட்டு எரித்து மெழுகு பத-மானவுடனே யிறக்கி வடித்து அடுப்பலே வைத்து

நாலு நாளைக் கொருதரம் முழுகி வரவும் யிளவென்னீரிற் சீயக்காய் தேய்த்து முழுகவும். யிந்த யெண்ணெய் தேய்க்கும்-போது மூக்கிலே நசியம் பண்ணவும். பத்தியம் - தப்பன வெய்து வொகாது.

மேகவெட்டைக்கு யெண்ணெய்.

அத்தி சாட்டாணைவேர், அமுக்கிராவேர் கொட்டான் கரந்தையிலை, வெள்ளருகு அறுவேரும் நீர்முள்ளிவேர், பொடுதலை, கத்தாழை முருங்கையிலை, பிரமியிலை, யிண்டயிலை தண்ணீர்விட்டான் கிழங்கு, சிறுக்கொடி-யிலை, யானெர்க்காய், வெங்காயம் வெள்ளைப்பூண்டு, பசுவின்பால் படி-உ யிவைகளை மருந்தெல்லா மிடித்துச் சாறு பிழிந்து வகைக்கு படி கால்வட்டி அதுக்குத் தக்கது யெண்ணெயுங் கூட-வாட்டு மெழுகு பதத்திலிறக்கவும். யிதை மூன்றுநாள் அஞ்சுநாள் ஏழுநாள் ரெண்டு நேரமுங் கொள்ளவும்.

பத்தியம் - கைப்பு, புளிப்பு ஆகாது.
மேகவெட்டையெல்லாந் தீரும்.

பிரமேயத்துக்கு.

அரைக்கீரை வருக்குத் தனை கொண்டு- வந்து நேகவரைத்து நல்லெண்ணெயைச் சாப்படி வெண்ணெயாக்கிக் கிழப்பி மூன்று- நாள் இருக்கவும். உப்பு, புளி ஆகாது.

யதுவம்

மிளகுப்பழும் கன்னிக்கொழுந்தும் நேக வரைத்து தின்ன வெதுமிச்சாங் காயவைத்து உண்டைக்கிக் கொடுக்கவும். மேகம் பேதி- யாய்க் கழிந்து போம். நரம்பு பேதி- யானால் மோருஞ் சோறுண்ணவும். பத்தியம் - உப்பு, புளி யாகாது.

சகல கிரந்திக்கும் ராமபாணச் சூரணம்.

திப்பலி, மிளகு, ஓமம், கருஞ்சீரகம் கார்போகவரிசி, பரங்கிப்பட்டை, நெல்லிக்- காய், கொந்தகம், இலாத்திப்பட்டை, சங்கம்- பட்டை, வெள்ளருகு, செருப்படை, கொட்டான்- கிரந்தி, பீக்கிலாத்திவேர், அமுக்கிறாப்பட்டை திப்பலி மூலம், அதிவிடயம், சாம்பிராணி, ஆதிக்காய், கிராம்பு. - சாறுவகை — கொடிவேலி, முசுமுசுக்கை, களக்கொடி,

183. பிக்கிராந்தி, கரிசலாங்கண்ணி யிது-
வகைக்கு சாறு படி-வ வாந்தக் காற்றில்
அந்த மருந்தையெல்லாம் போட்டு ஊறி
யெடுத்துக் காயவைத்து யிடித்து வஸ்திர-
காயம் பண்ணி வைத்துக் கொண்டு
நேரத்துக்கு வெருகடி பிரமாணம் இரண்டு
நேரமுந் சாப்பிடவும். யிதுக்கு சகல
கிரந்தியும் தீரும். பத்தியமாய் இரவும்.

பித்தம் அழன் பித்தத்துக்கு மருந்து.

இஞ்சிச் சாறு, எலுமிச்சம் பழச் சாறுஞ்
சக்கரையுஞ் சேர்க் காலை கொடுக்கவும்.

யிதுவும்.

பூலாயிலை, மொசுமொசுக்கை யிலை
பொன்னாங்காணி யிலை- நரிப்பயத்திலை
உத்தாமணியிலை யாந்தயிலை வெருகடி
நல்லெண்ணையில் காய்ச்சித்துத்
தலையில் வார்த்து முழுகத் தீரும்.

கிரந்திக்கு

ஊமத்தை யிலை போட்டுக் கட்டவும்.
யிண்டங் கொழுந்து காஞ்சிரங் கொழுந்தும்
வைத்துக் கட்ட உடைந்து போம்.

பித்த பாண்டுவுக்கு மருந்து.

கடுக்காய்த்தோல் -60 யாவுமே முழுதும்
பதினொரு எலுமிச்சம் பழத்தினை பிழிந்து
பிசைப்பாய் பிசைந்து அதுக்குள்ளே பாந்தத்
தாளைத் திணித்து புதுக்கலசத்தில் விட்டு வாய்-
கட்டி வெட்டினால் வைத்து வெட்டா-
னாலெடுத்து பாதில் ஒரு பிடிப்பு வெடுத்து
அரைத்து இருக்க உருட்டி முழுங்கிடவும்.
பிசைந்தப் பிசைப்பு உலர்ந்து போனால்
கரிசலாங்கண்ணிச் சாறு ஆகில், உசிலந்
தயிரமாகில் ~~[illegible]~~ வார்த்து அரைத்து
முழுங்கவும்.

ரத்த பித்தத்துக்கு

பூசணிக்காய் சாற்றில் நான் நெய் ~~[illegible]~~
விட்டுச் சீ போட்டுக் கொடுக்கவும்.

யாவும் -- வெள்ளைக் காக்கணம் வேர்
பசுவின் பாலிலரைத்து அதில் கிழப்பிக்
குடிக்கவும்.

யாவும் - பருத்திக் கொட்டைச் சாறு -2ரூ
பசுவின் பால் -2ரூ யாவை ரெண்டும்
ஒக்கக் காய்ச்சி திப்பிலி மென் பொடி தூவிக்
கொடுக்கவும்.

இருமல் – தீனியும் அந்தணரும் போலும்

184. பருத்திக் கொட்டை பருப்பும் நெல்லிப் பருப்பும் பொடிசெய்து பசுவின் வெண்ணெயில் கிழப்பித் தின்ன மாறும்.

காமாலை பாண்டுவுக்கு.

கையாந்தகரை, கழுதைமுள்ளி, காந்தி-ரொக்கின், பொருந்தனையும் ஒவ்வொன்று சாயாய்த் துவைத்து ஒன்றான சாறு கடைச்சரக்கும் அரைபொடி, அமுக்கரம் ஆனதோர் பரண்டை பத்து மிளகு பலம்-4 அக்கி-பலம்-4, வெள்ளைப் பூண்டு-பலம்-6, பெருங்காயம்-பலம்-கி. ஆகக் கூட்டி பொடித்துச் சட்டியில் அடையாகத் தட்டி சூரிய புகத்தில் வைத்துக் காங்கசவாரே பின்னையு மிடித்து வல்திரகாயம் பண்ணி ஒருபோது வெருகடி பிரமாணம் கொள்ளவும். யாதுக்கு முன் ஷயாதிகள் எல்லாந் தீரும். கைகண்டது. பத்தியம் - யாச்சா பத்தியம். கருப்பன் வஸ்துவாகாது.

இருமலுக்கு திப்பலாதி சூரணம்.

திப்பலி, மிளகு, அக்கி, சிறுநாகப்பூ, அதிமதுரம், யேலமிந்துப்பு, கடுக்காய், நெல்லிமுள்ளி, தாளகம், தாணிக்காய்ப் பிஞ்சு

கையான் தகரை யிதுகள் வகைக்கு அவ்
கட்டி யெடுத்து வெந்திரகாயம் பண்ணி
யிதுக்கு சர்க்கரை கட்டி அந்தி
விடிந்து வெருகடி பிரமாணம் கொள்ள
யிதுக்கு நானா வகை யருமையுந் தீரும்.

உஷ்ணத்தின் மேல் வந்த வியாதிக் கிணம் மருந்து.

இருமலுரு காக்கை யெரியும்
யிரைச்சலாய்க் கிளையெரியும்
தலைவலி மண்டை நோவுந்
இவுடன் வாயு யூறும்

யிதுக்கு மருந்து.

சீரகம் நெல்லி முள்ளி
திப்பிலி மிளகு சுக்கு.
பேராமியும் பெருங்காயம்
பொறுதருநீர் வறுத்துக் கூட்டு
சாரவே சர்க்கரை சநெய்யுங்
கூடவே முழுங்கிடக் கிணடுடன்
காலையிலே யிதுக்குப் பத்தியங்
கைப்புப் புளிப்புத் தவிரவும்.
தீரும்.

185. மேகக் கடுப்பு இரத்தக் கடுப்பு உஷ்ணக் கடுப்பு.
இதுக்கு உண்டை மருந்து.

மேகமாங் கடுக்கு மாகில்
மேருகிய கடுப்புண் டாகும்
சீதமு இரத்த முண்டாய்த்
தினமிந் தரிவு வேதாய்
ஊறிய கடுப்பு முத்தி
உடைந்திருங் கடுப்புத் தானே.

யாதுக்கு மருந்து.

அக்கிரா காரம் அதிவிடையம்
யேலம் சீரகம் மிளகு
மாசிக்கு தூரணம் அபினி
காயம் கிராம்பு பத்திரியும்
காயாம்பு மாதளை விதைபோக்கி
அரியாய் நிறுத்துப் படமடனே
தியரி வரைத்து உண்டையாக்கி
வேண் புருப்பு உரைவைத்து
இரண்டுக் கோருண்டை கொள்வீராய்
மேகக் கடுப்பு சீதக்கடுப்பு
இரத்தக் கடுப்பும் போய்விடுமே.

வயத்திலே பித்தம் விழுகிறதுக்கு.

உழுந்தங்களுடு நெருப்பிலக் காயப் போட்டு எருமைத் தயிரிலே போட்டுத் திரும்பக் காயப் போட்டு சோத்தில் வைத்து பிடித் தயிர் வார்த்து வாழைக்-காய்கள் உப்பில்லாமல் வேகவைத்துத் தின்னவும். ஒரு வேளை உப்புக் கூட்டிக் கொள்ளலாம். யாது துரைகளுக்குச் செய்து கைகண்டது.

வயத்துக் கடுப்புக்கு.

நாவல்ப் பட்டை, மாம்பட்டை, அத்திப்-பட்டை, நீர்ப்பூலாம்பட்டை யிவை-யெல்லாம் தனித்தனியே பலம்-1 நிறுத்துத் துவைத்து அவித்து அறுபதினாளிகை சென்ற எருமைத் தயிரில் விட்டுக் கலந்து யப்படி மூன்று காலமே குடிக்-கவும். கடுப்புத் தீரும்.

நீர்க்கடுப்புக்கு.

துவரம்பருப்பு உப்பு போடாமல் வேக-வைத்து பெருந்துத்தி வேர் முந்தி வைத்த நீர் வார்த்தரைத்துக் கொடுக்கவும்.

கல்லடைப்பானுக்கு.

ஒப்பு நெருஞ்சில்வேர் 'இவைகளை வெண்ணீரிற்க்
கொடுக்கவும். கல்லு விழும்.

இதுவும் - நெருப்புச் சுடுவனும் நீக்கி
ஆட்டுப் பாலாகிலும் பசுவின் பாலாகிலும் வார்த்துப்
பிசைந்து விழுத்திக் கொடுக்கவும். கை-
186. கண்டது.

காசரோகங்களுக்கு.

ஆலம் விழுது, தாழம் விழுது, பருத்தியிலை
செம்பருத்தியிலை, முசுமுசுக்கை இலை,
இவை இடித்துச் சாறு பிழிந்து இந்தச் சாறு
படி-ஒரு, பசுவின்பால் படி-ஒரு, சீரகம்-
பலம்-ஒரு, சர்க்கரை-பலம்-4 இந்த மருந்-
துங் கூட்டி இதுக்கு மென்பொடி சொர்ண-
பஸ்பம் ஒருபணவிடை, பூரண சந்தி-
ரோதயம் ஒருபணவிடை, நாகபற்பம்-
ஒருபணவிடை இந்த மூன்று மருந்துக் கூட்டி
அந்தச் சாறுடனே கொள்ளவும்.

இதுவும் கிருமிக்குத் தைலம்,

நல்லெண்ணெய்-படி-2, திருக்கிழை-
சடுவம், பொன்னாங்காணி, நரிப்பயற்றங்-
கொடி, நன்னாரிவேர், பூலாயிலை இந்த

மருந்து அங்கமிடுத்த் வகைக்குச் சாறு படி-உ யெண்ணெயிற் கூடவிட்டுக் கொதிக்க வைத்து மெழுகு பதத்திலிறக்கி யெண்ணெயை யருந்து யிதுக்கு மேன்பொடி மருந்து - இந்துப்பு - விராகனிடை - 1, பிதரோகணி - விராகனிடை - 1, கஸ்தூரி - விராகனிடை - உ, சடாமாஞ்சி - விராகனிடை - 1, கிச்சிலிக் கிழங்கு - விராகனிடை - உ, செம்பு - 1, அரும்பு - விராகனிடை - உ, வால்மிளகு - விராகனிடை - உ, அகிற்-சந்தனம் - விராகனிடை உ, நெல்லிமுள்ளி - விராகனிடை - 3 யிது வகையெல்லாம் யெண்ணெயிற் பொடி பண்ணிப் போட்டு சூரியபுடம் வைத்துத் தினம் முழுகும் போது காயவைத்து தியங்கு கரண்- கரண்டியை காயவைத்து பயலே வைட்டு ஆறவிட்டுத் தேய்த்து முழுகவும். இந்த வகை சில ரோகங்களுந் தீரும்.

சென்னிக்கு மருந்து.

செங்கத்தாரி வேர் - பலம்-௧, அங்கம் வேர் - பலம்-உ, முருங்கை வேர் - பலம்-உ, நைவேளி - பலம்-உ, வெள்ளைப் பூண்டு - பலம்-௧, திப்பிலி பலம்-௪, அரத்தை - பலம்-உ, சுக்குப் ப- பலம்-உ யிதுவெல்லாம் இடித்து உள்ளுக்கு

உண்டை பண்ணிக் கொடுக்கவும். அதுக்கு-
முன் சொன்ன பத்தியம் பண்ணவும். சன்னி
திரும்பும்.

அக சன்னிக்கு நசியம்.

யாக்சி சாற்கம் பண்ணிக் கொடுக்கவும் சுரையும்
அக்கு, அரத்தை, திப்பிலி, செவியம், திப்பிலிமூலம்
கண்டுபாரங்கி, சதகுப்பை, மரமஞ்சள், தூதுவளை
யிவைகளை கஷாயம் போட்டு யாதுக்கான கஸ்தூரி
187. மாத்திரை உரைத்துக் கொடுக்கக் குணமாம்.

யாரிவு சன்னிக்குத் தைலம்.

நல்லெண்ணெய்-படி-1, புங்கெண்ணெய்-
படி-கி, ஆடாதோடை சுரசம், குப்பைமேனி,
வேளையிலை, யெருக்கிலை, உத்தாமணியிலை,
தழுதாழையிலை, மணலிவேர், நொச்சியிலை,
பொடுதலை, சங்கிலை, கொடிவேலி, மாவி-
லிங்கயிலை யிதுகளையெல்லா மிடித்து
யாந்தச் சாற்றில் வெள்ளைப் பூண்டு-பலம்-3,
வசம்பு-பலம்-2, கடுகுரோகணி-பலம்-2,
சதகுப்பை-பலம்-1, கண்டுதிப்பிலி-பலம்-2,
திப்பிலி-பலம்-கி, திப்பிலிமூலம்-பலம்-கி,
பெருங்காயம்-விராகனிடை-2 யிவை-
யெல்லாஞ் சாற்றிலரைத்து எண்ணெயில்
போட்டுக் கொதிக்க வைத்து யாறக் வைத்து

உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூச கண்-
ணிருஞ் சயித்தியமும் மன்னிச்சு
பிறயாசிய யாதொன்வாந் தீரும்.

மாந்த வகைகளுக் கெண்ணெய்.

திகை, முருங்கை, களக்கொடி, கருநொச்சி, முஅமுஅக்கை, மணத்தக்காளி, பூனைப்புடுக்-கிலை, துளசி, உத்தாமணி, உள்ளி வசம்பு விளக்கெண்ணையில் யாதொன்வொந் தட்டிப் போட்டு யெரித்து உள்ளுக்குக் கொடுக்கவும். பத்தியமாய் வரவும்.

கடுக்கும் வயத்துக்கு மருந்து.

அக்கிரகாரம், அதிவிடையம், வேலரிசி, சீரகம், மிளகு, சுக்கு, அபினி, கிராம்பு, சாதிப்பத்திரி, மாதுளைவோடு யாதொன்றா-மைகுனைத் தயிரிக் குடிய ப் புடம்போட்டுக் கொடுக்கவும். யாருக்கு ரத்தக் கடுப்பு, சீலைக்கடுப்பு, சீதக் கடுப்பு, உஷ்ணக் கடுப்பு யாதொன்வாந் தீரும். கைகண்டது.

உள்மாந்தைக்கு.

சுக்கு, மிளகு, திப்பலி, கடுக்காய், சிறு-நாகவேர் யிவை யென்வாந் தனித்தனியே பொடிசெய்து வைத்துக் கொண்டு கண்டது கஸ்தூரி அபினும் கொண்டுவந்து சிறுக நுறுக்கி

ஒரு ஜாமம் போதப் பானைக்குள்ளே போட்டு
முக்குறுணி தண்ணீர் வார்த்து ஓட்ட நன்-
றாய்க் காய்ச்சி கோது யெடுத்துப் போட்டு
குறுகிவர்ற சமையத்திலே யடுத்த மருந்தை
188. தூவி ஒருபலம் பணவெடையும் போட்டு
லேகியமாய்க் கிளறி யிறக்கி பக்குவத்தில்
உரி பசுவின் நெய் வார்த்துக் கிளறி
தினமொரு நெல்லிக்காயளவு அறுபது-
நாள்க் கொள்ளவும். பத்தியம் - உப்பு,
புளிப்பு, கிரந்திப் பண்ட ~~ம~~ ஆகாது.

கருங்கோழிச் சூரணம்.

நெல்லிக்காய், கந்தகம் - பலம் - 4,
பரங்கிப்பட்டை - பலம் - 7, திப்பிலி - பலம் 3
மிளகு - பலம் - 3, கருஞ்சீரகம் பலம் - 1கி
கார்போக அரிசி - பலம் - 1, கண்டதிப்பிலி -
பலம் - இ, வெளரிசி - பலம் - கி, கிராம்பு -
வராகனிடை - ௰, நவச்சாரம் - வராக-
னிடை - ~~[illegible]~~ 5, சாம்பிராணி - வராக-
னிடை - 5 ஆக வகை - 11 யெடுத்துச்
சூரணம் பண்ணி கருங்கோழி கால்;
தலை, குடல் மயிர் போக்கிப் போட்டு
யந்தச் சூரணம் யதுக்குள்ளே அடைத்து
தைத்து அதின் பின் சத்திக்குள் அடுத்த

ஒரு பானையி லடைத்து அதுக்குத் தக்க
நீர்வார்த்து சீலைவாய்கட்டி அதின்மேல்
கோணியை வைத்துக் கட்டி கொண்டு
மூடி மூணு சாமமெரியவிட்டுக் கொழுப்பை
யெடுத்து யெலும்பு போக்கிப் போட்டுக்
காய வைத்து உரலிலிடித்துச் சூரணம்
பண்ணிச் சாதிபிக்கம் - வராகனிடை - 3
உடக் கட்டித் தின்று வரவும்.

~~[illegible]~~

மேகவெட்டைக்கு - பத்தியம் - கைப்பு - புளிப்பு தவிரவும்.

ஜீருகம் நல்லெண்ணெயுங் கொடுக்க மேகம் நிற்கும்.

வெள்ளைக்கு :- நல்லெண்ணெயுங் கோழிமுட்டைக் கருவும் மிளகு - பலம் - கியாது மூன்றுங் கூட்டிக் குடிப்பிக் கொடுக்கவும். பத்தியம் - உப்பு, புளி ஆகாது.

மூலத்தின் குணம்.

மூலமே கொபித்தாக்கால்
முட்டியே கழிச்சலுண்டாம்
ஞானனா வலகள வத்தி
சகத்திமேல் நோக்கி நிக்கும்
காலமே யிரைச்சலுண்டாம்
கழிச்சலும் அமர வாகும்
ஆலவேல் விழியா ளாளே
அறிந்திடாய் மூலந் தானே. 1

அரத்தினான் மேனி காய்ந்து
அபானவாய் அருக்கி கறந்து
யாரத்தமே கருத்து வீழ்க
யருப்புநோந் திருக்கொண் ணாது
உரத்திடன் மலம்வி டாது
உதயங்கீழ் நோக்கி நிற்கும்
வரத்தமே புளத்து மூல
வாயுவின் குணமி தாமே.

யாதுக்கு மருந்து

காட்டுக் கருணை கரிக்கருணை
காறும் பிரண்டை புளிநறளை
நாட்டுமல்ச் அக்கி வெறுகுமறன்
நல்கொரு வேலி மிளகின்னி +
ஆட்டுமல்ச் செங்கொட்டை பெருங்காயம்
உள்ளி சீரக மந்துகடுகு
கூட்டிப் பொடிதேனிற் கொள்வீராய்
குலைவு மூல மோடுமே.

விரேனாதம்.

மூடக்கொற்றான் வேரைத்தி தேற்றாம்-
விதை பூமனை உண்டை நிழலுலர்த்தி
வெண்பன்னைகட்டப் போற அன்னைக்கு
தெண்டு உண்டை தேனிற் கொள்ள
இருப்பு நிற்கும். யாந்த உண்டையை
மெல்லிய சீலையிலூட்டி காயப்போட்டுத்

திரித்திரித்து விளக்கேற்றவும். இந்த விளக்கு எரியும்வரை இருந்து விடாது. விளக்கு நிறுத்திப் போட்டால் விந்து விழும்.

பின்னும் கெந்தகஞ் சீந்தித் திண்டின்த் தடவப் பாம்பாம். இது தடவி இரப்ப-னையை உருவக் கிழவியாம்.

வேறு அழிஞ்சிப்பூவும் ஆமணக்கின்-காயும் வெள்ளாட்டுக் கோமியத்திலரைத்து உண்டை பண்ணி நீரிலுரைத்துக் கையின் தடவி உருவி யெருக்கப் பாம்பாம். இது தடவி வெப்பனை யுருவக் கிளவியாம்.

வேறு சாதிலிங்கமும் உரோமத்தின் சாறும் கத்தரிச் சாறும் தேனுங் கூட்டியரைத்துப் பிடவை (புடவை) யின்த் தடவ புடவை
190. இளையும்.

வேறு ஆடையொட்டி வேரும் மாக்காவி வேரும் அரைத்து உடம்பில் பூசி வெட்ட வெட்டடாது.

இந்த மருந்தைப் பூசி நெருப்பிலே நடக்கலாம். பிறகு அந்தக் காலுக்கு சங்கம்பழச் சாறு பத்து னாள் பிழியவும்.

வேறு - வெங்காரத்தைப் பொரித்துச் சுண்ணாம்பு பழன் கலந்து பாக்குடனே கொடுத்தால் போகிக்கும்.

வெள்ளைக் குன்றி மணி அளவும் பிரிஞ்சி
வந்து பசுவின் பால் வார்த்தரைத்து அதிலா-
டும் மாடப்புறா எச்சமும் கூட்டியரைத்து
உண்டை பண்ணி நிழலுலர்த்தி நீரிலுரைத்துப்
பூசவும். மையலைத் தடவ வெட்டவெட்ட
ஆறாது.

அகவேதிக்கு.

சிவதை வேர் பசுவின் பாலிற் அரைத்துப்
பண்ணி பொன்னிறமாகக் காயவைத்துக்
கடுக்காய், தான்றிக்காய், நெல்லி முள்ளி
சினைத்த ~~[illegible]~~ மிளகு சோகணியும்
பெருத்தே அக்கி திப்பலியும்
மடையாய்ச் சமனாய் சரிக்கட்டி
பாளைவென்/னீரிற் கொள்ளிரோய்
அ. இருத்த வினையுங் கழிந்துவரும்
இனமாம் நோகுந் திடமாமே.

கோரி இருட்டுக்கு.

மிளகுதனை வேர்ப்பொடி முன்னூ கூறு
மிளகுப்பொடி ஒரு கூறுமாகக் கலந்து
தேனிற் குழைத்து ஒருமண்டலந் ~~[illegible]~~
கொள்ளப் பத்தெட்டுக் குருடுந் தீரும்.

மதுவம் மேனுக்கு.

பருத்தி வெருக்கிலைச்சாறு - உழக்கு.
அம்பிலைச்சாறு - உழக்கு, உத்தாமணிச்சாறு-

உழக்கு, கள்ளிச் சாறு - உழக்கு பின்னை-
யென்பாரும் உட்டி எண்ணெய் - படி - இ
பிணை யாக்க னொடியத்து மெழுக்கப் பூசி
தொலை இதைப்பது தீரும்.

நீர்க்கடுப்புக்கு.

தேப்பு நெருஞ்சில் வேர் - பலம்-1, நெருஞ்சில் வேர்ப்பட்டை - பலம்-1 இவும் பிச்சம் பழச்சாறு விட்டரைத்துத் திரள் ஐந்தாம் உட்டுக் கொடுக்க விடும் கைகண்டது.

—

191. ## பாகல் காய்ப் பிஞ்சுக்கு தீரும் வியாதிக்கு அனுபானம்

பாகல் இலையும் படர்ந்து வந்த இடத்து வல்லிக்காயம் பண்ணி வைத்துக் கொண்டு பானத்தில் கொடுக்க பெரிப்பு நிற்கும்.

இந்தப் பொடியும் வைப்பானை அரிசியும் சேர்த்துக் கொண்டு வெருகடி பிரமாணம் கொள்ள சர்வ தோஷமும் போம்.

பாகல் காயும், பாகல் வேரும் பன- வெண்ணீரில் இடிக்க நீர்ப்பாடு போம்.

அந்த வேர் பழந்தண்ணீரில் கொடுக்க உளைப்பு போம்.

இந்தவேர் மோரிலுரைத்துக் கண்ணி-
விடக் கண் வேதனை போம்.

தேள்கொட்டினால் யிந்த வேரைத்
தண்ணீரிலுரைத்துக் கண்ணிலிடத் தீரும்.

இந்தவேர் காடி, தேனிலுரைத்துக் கொடுக்க சீதமண்டலி தீரும். வெறிமண்டலி
தீரும்.

இந்தவேர் பச்சைப் பாலில் கொடுக்க
வைத்தியந் தீரும்.

இந்தவேர் மோருடன் கொடுக்க
காமாலை தீரும்.

இந்தவேர் நாவாரம்இளியன்க் கொடுக்க
பிள்ளை யுண்டாம்.

இந்த யிலைச்சாறும் பச்சைத் தேனும்
கண்ணிலிடக் காசந்தீரும்.

இதன் விரையும் மிளகு மரைத்துக் கண்-
ணிலிட கண் உஷ்ணமெல்லாந் தீரும்.

வலங்கன மடைத்தான் மருந்து

முருங்கை யிலையைத் துவைத்துப் பிழிந்த
நாலிச்சாறுக்கு அரைக்கால்படி வெண்-
ணெய் வார்த்து யிரவெங்காயம்
போட்டு வெகவைத்து சட்டி தாளித்துக்
கொள்ள வலங்கனம் விடும்.

வயறுவலி மருந்து:

இலைக்கள்ளி வேரும் பெருங்காயமும் அரைத்துக் கொடுக்கவும்.

பொன்னாக் கிணத்துக்கு வலமுனையது தீர்க்க எண்ணெய் பண்ணும் வகை.

192. காவட்டம்புல்லும் செந்நாயுருவி வேரும் ஆதண்டம் வேர், புன்னாக்கு விதை, அளிஞ்சில் வேர், வில்வ பத்திரி வேர், வேப்பெண்ணெய், ~~[illegible]~~ விளக்கெண்ணெய், பசுவெண்ணெய் பசுவை கட்டி பொரித்து நக்க நிற்கும்.

கல்லடைத்தால் கல் விழ மருந்து.

முருங்கை கொழுந்து, மிளகு, பெருங்காயம், கருப்புக்கட்டி இவைகளெல்லாம் எலுமிச்சம்பழச் சாற்றில் கொடுக்கக் கல்லு விழும். ஆண்குறிக்கு மறைத்துப் பூசும். கைகண்டது.

மாங்கொழுந்து பெருமிச்சங் காயும் நெருக அரைத்து இளநீரிலாகிலும் பச்சரிசிக் கழுநீரிலாகிலும் கலக்கிக் குடிக்கக் கல்விழும்.

பதனம்! - காவிநிறமாயிருக்கிற முட்டைச் சாம்பல் போட்டு உள்ளங்காலிலேயும்

உள்ளங் கையாளையுந் தேய்த்து வெங்காரஞ்
சுட்டு ஜலம், திருதிப்பலி, அதசாங்
கொழுந்தும் அரைத்துக் கழுநீரிற்
கரைத்துக் கொடுக்கவும். சன்னு அற்று
விழும். பிறகு விரேசனத்துக்குக்
கொடுக்க நிற்கும்.

இருவாயுங் கட்டினதுக்கு மருந்து.

பெருங்கிழா வேர்ப்பட்டை பச்சைப்
பாக்களவு அரைத்து புளிவெந்நீரிற்
கொடுக்கத் தீரும்.

வைப்புருக்கு.

செங்கத்தாரி, கொடுவேலி, சிவனார்-
வேம்பு, தூதுவிளை, சங்கங் குப்பி,
வெள்ளருகு, சாரணை, வேளை, மாவி-
லிங்கை

வைப்புருக்கு.

செங்கத் தாரி கொடுவேலி
சிவனார் வேம்பு தூதுவிளை
சங்கங் குப்பி வெள்ளருகு
சாரணை வேளை மாவிலிங்கை
அங்கம் தான அமுக்கிராயும்
அத்தி புத்தாமணி நொச்சின்
சிங்காரக் கொந்தை சிறுபீளை
திருத்து நாயுருப் இண்டமணிப்

பாங்கு சரியாய் அமைக்கப்பட்ட
பாதி என்றே விளக்கெண்ணெய்
உள்ளி வசம்பு உள்ளத்துடனே
கொதித்து பாக்கி உட்கொள்ள
அங்கத் தடங்கை வாய்புகுதி
அகலப் போகுங் கண்டறியே

—

<u>யாதுவம்</u> எருக்க மொட்டு வைத்து எலுமிச்சம் பழச்சாறு வார்த்துக் கட்டவும்.

<u>யாதுவம்</u> கழுதை லத்தி அரைத்துக் கட்டவும்.

கொறுவளை வீக்கத்துக்கு.

வசம்பு, வெங்காயம், உள்ளி, நொச்சி
யிலை யாந்த மூன்று மருந்தையும்
193 எலுமிச்சம் பழச்சாறு வார்த்தரைத்துப்
புது சட்டியிலே யாந்த மருந்தைப் போட்டு
எலுமிச்சம் பழச்சாறு நிறைய வார்த்துக்
கிண்டி கொதிக்க வைத்து வீக்கமான
இடமென்லாந் தடவவும்.

படுவனுக்கு.

உப்பிலிவேர் காட்டுமல்லிகை வேரரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும். படுவன் தீரும்.

—

காமாலைக்கு.

உத்தாமணிக் கொழுந்து -30 அத்தி
மிளகு, கடுகு, காசுக்கட்டி, வெள்ளைப்-
பூண்டு -2 இதுவெல்லா மரைத்து
எண்ணெயிற் கலந்து ~~[illegible]~~ வெறு-
வயிற்றி லுண்ணவும். ~~இதுவே~~ காரம்
ஒந்தாமே ஏடை யிடை கூட்டவும்.
பத்தியமாய் இருக்கவும்.

அத்தி இன்பத்துக்கு

முள்ளங்கிக் கிழங்கு கொண்டு வந்து
மேல்த் தோலைப் போட்டு அதை நாலு
கீற்றாய்க் கீறி அதுக்குள்ளே பூரணச்
சந்திரோதயம் போட்டுக் கட்டி ராவுக்குத்
தூக்கிக் கட்டிக் காலையே யெடுத்துத்
தின்னவும். இதுக்குப் பத்தியம் -
கைப்பு மாத்திரம் கூட்டிக் கொள்ளவும்.

காது வலிக்கு.

அப்பைக் கிழங்கு, விழுதியிலை - வேர்,
வெள்ளை மிளகு, வெள்ளுள்ளி இவை யெண்-
ணெயிற் போட்டு எரித்துக் காதில்
வார்க்க வலி தீரும்.

செத்த பிள்ளை விழுக.

ஒருதேங்காய் கொண்டு வந்து தரைப்பால்,
பிழிந்து பொன்னரிதாரம் இந்தப் பாலுடனே கூட்டிக்
கொடுக்க பிள்ளை விழும்.

மருதவப் பிரமேயத்துக்கு.

மருதன் - பலம் - ௧ பொடிசெய்து தண்ணீரிற் குடிக்கக் குணமாம்.

வெள்ளை படுகிற பிரமேயத்துக்கு.

வெள்ளைக் காக்கரட்டான் வேர் - மூன்று யெலுமிச்சம் பழம் - சர்க்கரை பலம் - ௧, கிராம்பு - பலம் - ௧, சீரகம் - பலம் - ௧. யிவை யெல்லா மரைத்து வெள்ளாட்டுப் பாலிற் கலந்து கொள்ளத் தீரும்.

சகல பிரமேயத்துக்கும்

வழுதுக் கொழுந்து அரைத்து பசுவின் பாலுஞ் சர்க்கரையும் போட்டுக் குடிக்கவும் பிரமேயம் நிற்கும் தண்டுச்சத்து முண்டாகும்.

194. ## ரெத்த பிரமேயத்துக்கு.

பலவும் பசின் கொண்டுவந்து எருமைத் தயிரின் வடிகட்டி மூன்றுநாட்கள் குடிக்க ரெத்தப் பிரமேயம் மாறும்.

நன்னாரி வேர் பசுவின் பாலிலரைத்துக் குடிக்கக் கொள்ளவும். மாறும்.

யாதுவும் திப்பிலி, வசம்பு அரைத்துக் குடிக்கக் குடிக்கப் பிரமேயந் தீரும்.

அக்கினிப் பிரமியத்துக்கு.

ஆவாரங் கொழுந்தும் மொட்டும் வேந்த-ருவின் விதையும் தேங்காய்ப்பூ. தேத்தாங்-கொட்டை, பச்சரிசிக் கழுநீர் யாவுமொன்றாய் நாளி மோரில் கூட்டிக் குடித்தால் பிரமியந் தீரும்.

குனியத்துக்கு.

அமுக்கிறாப் பட்டையும் ஒரு தின்னாப்-பாளையும். செருப்படியும் அரைத்து உடம்பிலே யாங்கத் தடவ குனியம் தீரும்.

குனைக்கு.

கன்னியாலே வடக்கே போன வேரை வெட்டி வந்து மேல்த் தோலைத்து உலர்வைத்து இடிப்பு காடியைக் கொடுக்க - பேதியடங்கும்.

யாத்திக்கு மாற்று - பசுவின்பால் காய்ச்சிக்-குடிக்கப் போகும்.

மிஞ்சும் - செங்கத்தாரிப் பட்டை தீவி அம்மியாலே தட்டி உரி வெங்காயம் நசுக்கிக் கூடப் போட்டு நல்லெண்ணெயில் வார்த்துப் பிசைந்து வரை பத்து நாள் கொள்ளத் தீரும்.

கிராணிக்கு மருந்து

கவிழ்தும்பை நாரத்தங்காயளவு, புழுங்கலரிசி நாரத்தங்காயளவு, வெல்லம் நாரத்தங்காயளவு,

யும் மூன்றும் நல்லெண்ணையை வறுத்துக் காயவைத்துத் திரும்ப நல்லெண்ணை-யன்த் துவரை யாக்கி வைத்துத் தின்னக் கிராணி போம்.

மூன்று நாள் தின்ன ரெத்தக் கடுப்பு நிற்கும்.

யாதுவும் - விடத்தலை யிலையும் புழுங்-கலரிசியும் சமனாகக் கொண்டு அரைத்து நல்லெண்ணையில் தோசையாகச் சுட்டுத் தின்னவும் தீரும்.

யாதுவும் - ஒருபலம் அக்கி வறுத்து பூரத்திலே போட்டுத் தேசிப் பேட்டு யிடித்து எலுமிச்சம் பழச்சாறு வார்த்த-ரைத்து அடையாகத் தட்டி சுட்டு காய-வைத்து உழக்கு நல்லெண்ணையிற் ~~[illegible]~~ போட்டு அதில் அடையைப் போட்டு
195. சிவந்து வருகிற பக்குவத்தில் எடுத்துப் பின்பு எலுமிச்சம் பழச்சாறு வார்த்தரைத்து யாந்தப் ~~[illegible]~~ பிரகாரம் மூன்று விசை அட்டுப் பொடி செய்து வைத்துக் கொண்டு ஒரு வேளைக்குப் ~~[illegible]~~ பிரமாணம் காலே கொள்~~[illegible]~~ளவும். யாதுக்குப் பத்தியம் - தலத்திலே அச்சமட்டு ~~[illegible]~~ தண்டியாலே எண்ணெய் காயவைத்து அதனத்தின்மேல் வார்த்துக் கொண்டு ~~[illegible]~~ அக்கு பொடி செய்து அதிலே தேன் ~~[illegible]~~

கலந்து அசனம் பண்ணின பின்பு ஒரு
சொம்பை நெருப்பிலே காயப் போட்டு
எடுத்து எருமைத் தயிருக்குள்ளே
போட்டுத் துளசி அசனத்தின் மேல்
வார்த்துக் கொள்ளவும். பாது செய்து
கைகண்டது.

பாதுவம் - இஞ்சிப் பட்டை தயிரு-
டனே அரைத்து கலக்கிக் கொடுக்கவும்.
ரத்தக் கிராணி தீரும்.

பிரசன்னிக்கு எண்ணெய்.

பிரசன்னி வருகிற போது வாழைப்
பசியும் பிச்சிக் கொழுந்தும் ~~[illegible]~~ தம்பிர
பசியும் உள்ளி வசம்பும் கூட நசுக்கி
நல்லெண்ணையா எரித்து வடித்து அந்த
எண்ணெய் முதுகந்தண்டு பட்டி தேய்க்க-
விதுகளிலே பூசவும். அந்த வடிவத்த
கடுகைப் பொட்டணமாகக் கட்டி
சுட்டு காய வைத்துப் பொட்டணத்தை
பொத்திப் பிடி ~~[illegible]~~ முதுக சந்து
பாதுகளிலே ஒத்தடம் போடவும். ஓடு
பொறுக்கா விட்டால் நிறுத்திப் போடவும்.

கஞ்சாப் பொடி வறுத்துப் ~~[illegible]~~
பசுமைப் பண்ணி யாருக்கிருந்தாலே பனங்
கருப்புக்கட்டி பொடிபண்ணித் தாவி வேதும்

பிடித்து உடனே சாப்பிட பழந்தண்ணி புதுத்தண்ணி, பாதண்ணி இதுவெல்லாந் தீரும். இந்தப் பொடியை பசும் வெண்ணெயினில் நயனத்தில் நசியம் விடவும்.

196. தேமலுக்கு படர்தாமரைக்கு மருந்து.

அரிதாரமுஞ் சுண்ணாம்புந் தும்பைச் சாற்றிலரைத்து முன்னுணாமற் பூசித் தினம் உருட்டிப் போடவும்.

மிளகைக் கள்ளிச் சாறு வார்த்தரைத்து மேலும் பூசி உள்ளுங் கொள்ளவும். இது படர்தாமரைக்காம்.

நிலையாவரை வேரை பிண்-டைச்சாறு வார்த்தரைத்து உள்ளே முன்-றண்டை கொண்டு மேலேயும் பூசவும். கைகண்டது.

கொன்னைக் கொழுந்தும் தகரைவிதை விளாம் பசினரைத்துப் பாலிற் குழப்பிப் பூசவும்.

இதுவும் - அதிமதுரம், வெள்ளரிவிதை சீனாக்காரம், படிக்காரம். இளநீர் வார்த்துக் காய்ச்சி. கஷாயமாக்கி அதிலே சர்க்கரை போட்டுக் கொடுக்க உதட்டுக் கட்டியான விழுதுகள் இதுகள் தீரும்.

யாதுவும் - தேங்காயோடு அட்டு அம்மி-
மேலே வைத்துச் சப்பையாகவே மூடி
வைக்கத் தீந்த தயிர் பிறங்கும். அந்தத்
தயிரும் பூசவும். மேன் பாதாமுறை
யாது போம்.

தவனமும் கைகால் அசைப்புமா
யிருந்தால் அதுக்கு மருந்து

பிரமியனை, கருக்காய், வழுதியணை
யிலை யெடுத்து பதக்கி தண்ணீர் வார்த்து
நாழியாகக் காச்சி கொடுக்கிறமாத்திரம்
யிருத்துக் கொண்டு திறங்கை விளக்-
கெண்ணை வார்த்து கலந்து கொடுக்க
தாகம் நிற்கும் அசைப்பு வாங்கும்.

மேல் யரைப்புக்கு

கண்டங்கத்திரி அடுவேருந் துவைச்சு
சாறு பிழிந்து யாந்தச் சாற்றிலே சுக்கு,
மிளகு, திப்பிலி, வெங்காயம், உள்ளி
யிவையெல்லாம் பொடி செய்து யிந்தசாறு
வார்த்தரைத்து உரிச்சாற்றிலே கலக்கிக்
கொடுக்கவும். பத்தியம் - கைப்பு, புளிப்பு
தீரவும். கைகண்டது.

197. ## இரசப்படைப்பு முறிகிறதுக்கு மருந்து.

மிதிபாகலினை துவைச்சி - அரைப்படி - சாறு உள்ளுக்குக் கொடுத்து காற்படி சாறு மேலுக்குந் தடவினையாட்டு மூணு நாளிகை உடம்பிலே அவரக் காய வைத்த பிறகு கழுத்தளவு தண்ணியிலே மூன்று நாழியள் நின்று குளித்து உப்பில்லாமல் கஞ்சியுஞ் சோறுங் கொடுக்கவும்.

யாதுவும் - பாகலினையன் சாறு படி-யு இ-பலம் மிளகுமரைத்துக் கலக்கிக் கொடுத்து மேலுக்குப் பூசி தண்ணியில் நின்று குளிக்கவும்.

யாதுவும் - எள்ளாவெட்டால் உட்காரந்திருந்தால் கழுத்தளவுக்குக் குழிவெட்டிச் சாணி கரைத்து விட்டு அதில் வட்டி வச்சி அதிலே உட்கார்ந்து யிருக்கவும். தண்ணீர்விட்டுக் கழுவி மறுபடியும் போட்டுக் கஞ்சியும் சோறும் சாப்பிடவும்.

நரம்புச் சிலந்திக்கு.

பேய்க்குமட்டிக் காயை வறகம் வைக்கோலிலே வேக வைத்து மேல்த்தோலுரித்துப் போட்டு நய்ய நொருக்கிப் பிசைந்து வைத்துக் கட்டிப் போடவும்.

உளமத்தை யானை விளக்கெண்ணெயின்
வாட்டிக் கட்டவும்.
பூவரச இலையை யப்படிக் கட்டவும்.

அரையாப்புக்கு.

மையக் கொன்னை யானையை விளக்-
கெண்ணெய் விட்டு வதக்கிக் கட்டி
மேலே வைத்து அழுந்தக் கட்டிப் போடவும்.

பிரமியத்துக்கு.

முத்தின தேங்காய் ~~[illegible]~~ திருகி பச்சைப்
பாலாய்ப் பிழிந்து அதிலே இ-பலம்
வெள்ளைப் பூண்டு அரைத்துக் கலக்கி
காலமே யந்தப்படி மூன்று நேரம் குடிக்கவும்.
சோறும்
பத்தியம் - தேங்காய்ப் பாலும்
சாப்பிடவும். யாது கைகண்டது
உப்பில்லாமல்.

இருமலுக்குக் கஷாயம்.

சித்தரத்தை சீவிப் போட்டுக் கஷாயம்
வைத்து அந்தக் கஷாயத்தில் கல்கண்டு
போட்டு ஒரு நாள் கொடுக்க யிருமல்
மாறும்.

198. ## வெண்ணெய்க் கட்டு செய்யும் வகை.

உத்தாமணிச்சாறு படி 4-இக்கு கல்-
லுப்பு - படி-1 போட்டு ஒரு பானையில்
வைத்து எரிக்கக் கிட்டளாய் பா~~[illegible]~~
-யில்

பிடித்துப் போகும். அந்தப் பானை உடைத்து மருந்து எடுத்து வைத்துக் கொண்டு கொடுக்கவும். தீரும் வியாதி - அஜீரணம் செரியாக்குணம், வயிறு உப்பசம், வயிறு-யாசிவும், வயிறு வலி, இப்படிப்பட்ட வாய்வுக்கும் ஒரு கழஞ்சிக்காய் ~~மருந்~~ மருந்து கொடுக்கவும்.

உள்மூலத்துக்கு மருந்து.

வெள்ளெலி மூணு எலி கொண்டு வந்து தோல், மயிர், குடல் போக்கிப் பொட்டு சுத்தி- மூலம் அரைத்து வயிறு நொம்பத் திணித்துத் தைத்து நல்லெண்ணையை அப்படி எண்-ணையில் வேக வைத்து அந்த எண்ணையுஞ் சாப்பிடவும். குடுத்து யந்த எலியுஞ் சாப்பிடவும் யாந்தப்படி மூணுநாள் சாப்பிடவும்

கெற்பத்து மேல் வந்த ரெத்தக் கழிச்ச-லுக்கு.

மாங்கொட்டை, ஆத்திப்பூ, வெள்ளி-லோத்திரம் யது மூன்றும் சமன் கூட்டிக் கழுநீரில் குடிப்பக் கொடுக்கவும்.

கரப்பான் வீக்கத்துக்கு

இவணையணை, வசம்பு, ஓமம், வெள்ளைப்-பூண்டு யாது வறுத்து அரைத்து வீக்கத்தின்-மேல் பூசவும்.

மகிழம்பூச் சூரணம்.

மகிழம்பு, சீரகம், சதகுப்பை, கொத்தமல்லி, கிராம்பு, அதிமதுரம் வகைக்கு வராகனிடை-2 ஏலம் - வராகனிடை - 12, கல்க்கண்டு வராகனிடை - 24 இவையெல்லாம் காயப்-போட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து நேரத்துக்கு வெருகடி பிரமாணம் இரண்டு நேரமும் கொள்ள பசி, தீபனமுண்டாம். கால் கைகள் அசதி, கால்கை மெலிவு, பித்தத்தின் மேல் எடுத்த பொல்லாப்புகள், உடம்பு இளைத்துப் போதல், இருமல்,
199. கபக்கட்டு இதுவெல்லாம் குணமாம். இதுக்குப் பத்தியம் - பச்சை பத்தியம்

18 கணைக்கும் பேய்த்துமட்டிக்கா-யெண்ணெய்.

பேய்த்தும்மட்டிக்காய் சாறு - நாழி விளக்கெண்ணெய் - நாழி இது இரண்டும் சேர்த்து கடுகு ரோகணி, வசம்பு, பூண்டு இது வகைக்கு - 5, சிவனார் வேர்ப்பட்டை-வராகனிடை - 7 அரைத்து எண்ணெயில்-போட்டு பதமாய்க் காய்ச்சி வைத்துக்-கொண்டு நேரம் 1க்குத் துட்டிடை கொடுக்கவும். இதுக்கு அழுகணை, இசி-கணை, நாய்க்கணை இந்தவகைக் கணையெல்லாந் தீரும். உப்பு, புளி தள்ளு-மாகாது.

நரம்புச் சிலந்திக்கு.

நேர்வாள முத்து உடைத்துத் தோடு போக்கி நஞ்சு எடுத்துப் போட்டு ~~க~~ ஆனைத் திப்பிலி, வால் மிளகு, கடுரோகணி ஆக யிவை வராகனெடை-1 முசுக்கா யனைச் சாறு விட்டு அரைத்து குன்றிப்பிரமாணம் உண்டை செய்து அக்கி கிஷாயம் பனை வெல்லம் யிதினொடு உண்டை யிட்டுக் கொடுக்கவும்.
பத்தியம் - உப்பு, புளி ஆகாது.

வெள்ளைக்கு மருந்து.

அரப்பு - பலம்-௩ ஆல் பண்ணி புதுக்கலத்தில் விட்டு அரைப்படி மோர் விட்டு ராவு முப்பது நாழிகைக்கு மிருந்து விடிந்து தெளிவெடுத்துக் காப்படி நீச்சத் தண்ணீர்க் காப்படி கலந்து மூணுநாள்க் குடிக்கவும். உப்பு, கீரை, பருப்பு, மோர் கூட்டவும்.

புண், ரணங்களுக்குக் களிம்பு.

மெழுகு - பலம்-1, வெள்ளைக்குங்கிலியம்- பலம்-௩, துத்தம்- வராகனெடை-1, துருசு- வராகனெடை-1, மஞ்சள் - விராகனெடை-1 துருசு சேர்த்துக் கொள்ளவும். எல்லாந் தூள் பண்ணி

வைத்துக் கொண்டு நல்லெண்ணெய்
அதுக்குத் தக்கது காய்ச்சி மெழுகு உருக்கி
பாகு தான் போட்டுக் கிண்டிப்
பதமாய் வைத்துச் சீலையில் தடவிப்
புண்ணுக்குப் போடத் தீரும். கைகண்டது.

200. சகல அரத்துக்கும் வச்சிராதிக்
கஷாயம்.

வில்லாதே வெப்பாலை கொத்தமல்லி முத்தக்காசு
சீறு அதிவிடையம் நன்னாரி கோஷ்டம்
தப்பாத தூவிளை கொன்றைப்பழம் வெப்பாலை
தன்னுடன் வட்டத்திருப்பி பர்படாகம் மதுரம்
வைப்பான் கடுகுரோகணி வசம்பு மஞ்சள்
மரமஞ்சள் சிறுதேக்கு வேரும்
செய்ப்பான யவாக்ஷாரம் பேய்ப்புடல்
சுண்டையும்
விதையுடனே நிறுத்திடு சாறு நீரில்
தப்பாமல் விட்டெட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்ள
சத்தியமாய் அரம்போம் வச்சிராதி யதனே.
அரத்துக்குக் கஷாயம்.

முன்னை பாதிரி தூவிளையும்
சீதிரும் குமிழும் பெருவாகை
வன்னை மான அலிஞ்சி முருங்கை
வகையாக அக்கி நீந்திவுரன்
பண்ணு

அரத்துக்குக் கஷாயம்

முன்னை பாதிரி உழிஞையும்
முதிருங் குமிழும் பெருவாகை
வர்ண்ண மான அளிஞ்சிமுள்ளோர்
வகையாஞ் அக்கு சிந்திலுன்னி
பண்ணு மெட்டுருந் தோல்போக்கி
பருகு முன்னே தணைக்கொள்ளுச்
சொன்னோ மேன்த்தோன் விஜுமெண்டே
தொகுத்தார் முனிவர் சொல்லிதுவே.

அரத்துக்குத் திரிபுரக் கஷாயம்.

பாதிரி முன்னை பெருவாகை
பகருங் குமிழும் வில்வமுடன்
தீதக ஆனைநோர் தணைக்கொன்றை
சிறுவழுதுணை நெருஞ்சில் தண்ணுடனே
காதிய சிற்றாமல்லி பேராமல்லி
கண்டங் கத்திரி யிவைபத்தும்
முதிர் வாதங் குறைத்தருளே –
யிவைதிரி புர மென்றாளே.

அர. தீரவேதிக்கு.

கஞ்சாங் கோரை கற்றாழை
கருதும் வெப்பாலை விதையுடன்
மிஞ்சார் பிரமி கடுக்காயும்
விடைப்பாஞ் சுக்கு முடன்கூட்டி
வஞ்சார் புலியன் நாளொன்றாய்
மதியா வாமனைக் கொண்ணையுடன்
அஞ்சா தெந்நீர் குடிப்பீராய்
யமனுந் தீத அரம்போகும்.

201. வாயுவின் பேரிலே விக்கலுக்கு.

பரங்கிப்பட்டை, சுக்கு + காத்தமல்லி
மூணும் போட்டுக் கியாழங் கொடுக்கவும்.

பிரமேயத்துக்கு.

மூன்று எலுமிச்சம் பழமும் அரைப்பலக்-
கல்க்கண்டும் போட்டுக் கஷாயம் போலே
கலக்கி வைத்துக் கொண்டு மூன்றுநாள்க்
காலமே குடிக்கவும். யாதுக்கு - நீர்ச்சுருக்கி
எரிப்பு, குதிரைமூத்திரம் போலே பொங்கியது
நிற்கும் - கைகண்டது. பத்தியமாய் வரவும்.

மேக வல்லாரி.

நாற்றிசை தன்னிலே நல்லோர் யம்மனை
தோத்திரஞ் செய்தே தொல்புவி யதனிற்
சாத்திய மேகம் தனைத் தீர
யேற்றும் வல்லாரி யியம்பக்கேள் மின்னே.

திரிகடு கோரந் திப்பலி மூலம்
கொத்த மல்லிகை உறுவாய் விளங்கம்
ஓமஞ் சதையம் ஏர்க்குஞ் சீரகம்
லவங்கப் பட்டை நயந்தரு கோஷ்டம்
தேசா புரமுஞ் சீரக முடனே
ஆ: லவங்கப் பத்திரி நற்றானிக் காயும்
யாவுமென்னாம் பலமை யதுடன் சேர்த்து
பரங்கிப் பட்டை பலமொரு அஞ்சு
சேங்கொட்டை நாற்பது சேர்க்கின் வெட்டி
குமரி மடலுக்குள் தொள்ளையாய் வைத்து
சிக்கின்றனி லிட்டுச் சேரவே அட்டு
வெந்தபி னெடுத்து விதையெல்லாஞ் சாணியில்
புளியனைச் சாற்றிற் போதவே புரட்டி
கிளைச்சுக் கெல்லாஞ் சாயனைத் திடித்து
என்று அரைப்படி யருசெங் கொட்டையும்
பனைவெல்ல முதான் பன்னிரு பலமும்
தன்னையு மிட்டுத் தான்சேர்த் திடித்து
களக்கொட்டை யளவாய்க் குருண்டை செய்து
அந்தி சந்தி- தனில்/அதி-தனில் [illegible]
கண்டவாங் கொண்டால் வருவனன் தினி
பத்தியந் தவிழும் பசியுடன் கோளாய்
202. இச்சா பத்திய மேதா வெண்ணின்
கரப்பான் பண்டங் கையிற் றொடாமல்

பாருப்பா நாகின் நிறுநிறுத் தோதே
தீரும் வியாதி செப்படக் கேளும்
அந்திர வாய்வு அனைத்துடை இக்கி
வந்திடுங் கிரந்தி வயுநோய் வாய்வு
கைதனில் நொடுக்கு கால்தனில் நொடுக்கு
மெய்தனில் துடிப்பும் வெகுரணப் புண்ணும்
பாதத்தனி) ஆவித்திடும் மென்னாக் கிரந்தியும்
மேகத்தி னெடுத்த வெகுநோ மென்னாம்
போகத்தன் மந்திர போக்கென்றுஞ் சொல்லு.
~~[illegible]~~

மன்மத சிந்தாமணி லேகியம்

கார்மேகம் போலுதித்த கன்னி மரியாய்
கமலபதம் போற்றிசெய்து கருத்திலுன்னி
சீரணியின் மன்மத சிந்தாமணி லேகியத்தைச்
௨. சாற்றுகிறேன் மாணிடரே தன்மருந்தைக் கேளீர்
சீர்பெருகுஞ் சிறுதேக்கு லவங் செவ்வியம்
சீரான கோஷ்டமொடு சாதிக்காய்ப் பத்திரி
சாறுமியான் கூத்துடன் திருவான ~~[illegible]~~ தேகீ
சன்ன லவங்க(பட்டை) பேரிச்சம் பழமோடு.

—

இந்தப் பாட்டு பிழையில்லாமல் மருந்து
பிழையில்லை. மருந்தே குறையில்லாமல்ப்
பாட்டு வேண்டிக்கை.

—

முந்திரிகை அக்கிராகாரம் போலத்தக் காயும்
முருகின்ற சித்திரத்தைக் காட்டுக்கிராம்பு
வந்தையுடன் வாய்விளங்கம் அவணி கிராம்பு
விதமான பெருஞ்சாதிப் பத்திரியுங் காயும்
வாள்மனை கோதும்பையரிசி உளைநீர்க் கக்கு
சாறாயப் பருப்புடனே பூனைக் கிழங்கும்
நாகஉற்சிவ கொந்தி யுடனே குங்கிலம்
நற்புடன் மொன்தாங்க் கழுபுடம்
பூனைக்குத் தெங்கா யுடனே.

—

வாருமுட னின்னமொன்று சொல்லுவேன் கேளு
203. வகைவாக விரையன்னந் திருத்தினச் விரையும்
சூரிய காந்தமொடு அத்திராப் பச்சை
துளங்கியனா மெரிக்கிவிரை யாவாரை
யுடனே
நீர்முள்ளிவிரை பூணைக்காலி யச்சிவிரையும்
நிலையான திருநாற்றுப் பச்சையுட னேதான்

—

சேவாத அத்திப்பிரா மத்தைமெழுகு பீக்கு
அழகான செம்பசளை பூவந்தி விரையும்
பாலிருக்கு பெருநெருஞ்சி நெண்டும் வெள்ளரி
பாப்பான திருக்கிரை முருக்குடன் விரையும்
காட்டுவிடு சாக்கிரை விராலியுந் தன்முருங்கை
கனமான செந்திருக்கு காப்போக வரிசி
நாட்டுதனில் நிலவு கவிராமன் காரை
நயமான சித்தைச்சீர் மதுரமை டுப்பாய்

அச்சையன் மிக்கவே நேருளாகவே சொண்டன்
அடவாகப் பிசின் வகை சொல்வேன் —
பச்சமாய்க் கேட்டு மனதிலே வைக்க
பரிவுடன் வகைதனைக் கேளும்
பாங்கான கம்பப்பசின் பரிவுடன் எடுத்து

காணடத்தி லேவளரு மந்த வேருஞ்
கருவேலின் தின்னுடனே புரசம் வெளாவும்
மாணிர்த்தி வெள்ளருஞ் கேட்க அந்த
வனமுலிகை [illegible] துவையச் சொல்வேன்
வாணவர்கள் தானறியக் கேழ்மின் தீந்தி
வானான [illegible]கிந்தி கோனைக் கிழங்கும்

நிலப்பனை தண்ணீர்விட்டான் கருவேலம் பிசினும்
நிலையான நன்னாரி பூமி சக்கரையும்
அலிப்புட னழுக்கிறா அத்தி சருகணையும்
அடவாகத் தென்னங்கனி
திடமாக யெடுத்து வகைக்கிரு அட்டிடை யெடுத்து
நிறையுடன் வகைபடச் சேர்ந்து தனை
படவேதான்

ஆகவுட மின்னானது சொல்வேன் அந்த
204 அருமையாய்த் தானெடுத்து கற்பமிது காணும்
நீர்தனிலே அத்தைநெண்டு சாமம் போட்டு
நீங்காமல் தானெடுத்துப் பாங்காக வணைத்து

வீரமொ யம்மருந்தை யிடித்துத் தானும்
வாதமாக நாலத்தொன்று பதமாகச் சேர்த்து
மெல்லா மிடித்துத் தானாக்கிச் அண்ணித்து
திக்கிறை அக்கண்டு நெண்டி யொன்று
சேர்த்து
பாங்குடனே நெண்டிவெங்காயத் தேன்றை யங்கை
பாலுடன் தெங்காய்ப்பால் பாங்குக்கொரு
பதமாய்
தானொருவர் கையினால் பிசைந்து அதைவிடு
சாறித் தெருத்துருட்டி வேகியமை தாக்கி
சார்பதினை யானைவெருக் சித்தர்கோ முனிவர்

~~[illegible]~~
கண்டெழுதி வைத்தபடி சித்தர்களே ~~[illegible]~~
கேளீர்
மண்டலங்க ளெண்டிசையு மெச்சும் அகத்தியர்
மன்மத சிந்தாமணியை வகுத்துரைத் தாரே.

—

ஆதவா யம்மருந்தை உலகி லுண்ண
அந்தணர்க்குத் தானத்..ம வந்தையுடன் [illegible]
நாதன் ஈணைவணங்கிப் பூசைபண்ணி அவித்தம்
நாலெரிய காதினிடை உரப்பனமாய்க் கொள்ள
தீரும் வியாதி வகை கேளும் தையல்ப்
பித்தம் வாந்தி மசோகமே போகும்
சாதும் விரைவிந்தைச் சுன் மேகம்
~~[illegible]~~ சாங்கிராதி கிராணியுடன் ஞாசிகா வாய்வும்.

அஷ்டதிசை வாய்வு பதினெட்டுக் குன்மம்
அக்கினி மந்தமுடன் திக்கெனவே யோடும்
உஷ்ணமுடன் நீரெரிவு மேகம் வெள்ளை
உறவாக யருவதையுந் தர்மமாய்ப் போக்கும்
நாதவசீகரமும் யோகம் சரீரம்
நற்பலனைக் கொடுக்குமந்த மெய்ததிர் போலே
ஆசைபெரு மன்மதனைப் போலவே யந்த
அன்னநடை மாதர்தன்னைக் கண்மயிட லாகும்
வீரியம் பெருகும் பலனாகும் சம்பிரம்
வேணதினிச் சங்கீதங்க ளிங்கிதங்க ளாகும்

வஞ்சனை பஞ்சாக்ஷ பல்லி-யோடே சேர்ப்பாய்
205. வைப்புக் கட்டப்புடனே யேவல் முறைப்பாடு
அஞ்சனங்கள் கண்திஷ்டி பார்வை மாய்கை
அவனை தீனி நாச்சித்தின் அபயமிட்டு ஓடும்
அந்திரனைப் போலவெரிவு மாகும் உலகிலுள்ள
அஷ்டகமாய் வயதுநூறு தானெரிவு
மாகும்பார்.

மேகனாதித் தயிலம்.

தீர்மேவு நாதன் சிந்தைதன் னேயுரைத்த
பார்மேவு மானிடர்க்குப் பண்பாக
போர்மேவும் ~~[illegible]~~ ம

மேகனாதனெண்ணெய்.

சீர்மேவு நாதன் திருந்ததன் சேவடியைத்
பார்மேவு மானிடர்க்குப் பண்பாக - போர்மேவும்
மாத்திரைத் தண்டோ மருந்துபற்ப சூரணங்கள்
சேர்த்தயெண்ணெய் லேகியங்கள் செய்துக்கள் -
ஆத்தியதாய்

ஆகமத்தி லுள்ளபடி அன்பாய் அருந்தமிழில்
மேகனாதத் தயிலம் விள்ளுகிறேன் - பாகமதாய்ப்
புண்குழிராய் மாவிலிப்பவை புதுஅளிக்கச்
செய்யுமது

சிவக்குமின் சுளாத்தி தன்னுடனே - கொங்கில்வரு
நாரணன்புன் வேம்பு நுடங்காத புவைந்து
சீராய் நரிவிரை திவன்வேம்பு - பாதாமணிப்
பத்துடனே ஐந்தும் பட்டைவகை யாகிப்
பூத்த மருந்தின் முறையக்கேள் - வித்தகத்து
ஆடுதின்னாப் பாளை வெள்ளருகு கலைக்கொடியும்
தேடு சங்கங்குப்பி செருப்படியும் - நீடுநல்லாய்
கொட்டான் கரந்தை கொளிஞ்சைப் பொடுதலையு
கட்டாக வேழுங் கிளைதுகையின் - மட்டாகக்
கூட்டி வகைக்கிவகை கொண்டேயி ரண்டுபலம்
வாட்டமுட னிடித்து வண்மையாய் - நாலுபடி
மாயி

பானை தனிலிட்டுப் பரிவாக நீர்குறைந்து
தானு மதுவிட்டுச் சுத்தமாக - மானேகேள்
நன்றாய் நனைத்திடித்து நன்முன்னீரிற் போட்டு
இன்றாகவே பிரிந்து கோதுதன்னில் - நன்றாகச்
சீலை வடிகட்டித் திரமாகச் சேர்த்தபின்பு
ஆலக் குருபரனைத் தானினைந்து - மாலைய-
னும்
கூட்டுநீ நல்லயெண்ணையை உ ஆமன்
உரைத்தபடி

206. மாட்டுங் கிடைச்சுக்கு வண்மைகேள் - தாநுழ-
கமாய்
பட்டை வலமொன்று பரிவாகப் பொடிசெய்து
கொட்டை வலம்ரெண்டு குடிநீர்போக்கி -
கட்டையாய்
தன்னி விடுத்து சமையத்தொரு முன்பொடியும்
சொன்னபடி யெண்ணைதனிற் றாவிலே -
நிண்ணையமாய்க்
கிண்டிநீ நன்றாய்க் கிளரியபடி பத்தாமன்
பண்டு மெழுகு பதம்பார்த்துக் - கொண்டிறக்கி
ஆகு மெண்ணைதனை அச்சமற தேகியனுக்கு
பக்குவமாய் அந்திசந்தி பருவக்கேள் - செய-
மாய்க்
காற்கடுட மெண்ணை கலந்தே கரண்டியுண்ண

வர்க்கமுடன் நோய்தீரும் உண்மையே —
பொற்கொடியே
கான்முடக்கம் கைமுடக்கம் கூடிய வெப்பத்தை
மேன்தடிப்பு இரத்தம் ஊறிவு சொரிகிரந்தி
தோனறிவ
பாய்ந்த சொறிசிரங்கு படர்தா மரையுடனே
வாய்ந்தவிரங்கப் புத்துடன் மேகம் - பாய்ந்த
கிரந்தியதை யாப்புடனே கிட்டாது வெவ்வி-
னையும்
பறந்துபோம் வேறொருநோய் பற்றாது - மறந்தா-
லும்
பத்தியங்க- ளுண்டே - பரிவான உப்புமொச்சை
பாகற்பயற்றை
உத்த மிளகு அதைக் கீரையுடன் - சுத்தியாய்
ஆறுனா ளானபின்பு ஆவிமோர் தான்உடைய
தீருனாள் முவைந்து தென்னாக்கள் - நீருமே
நெண்டுநோ ளானபின்பு நல்லெண்ணையும்
முழுகி உளாறிய
வேண்டு முடலி ருக்கும் - கண்டுகொள்ளு
மென்று திருமுனிவர் ரியம்பினார் புலவிக்கு
நன்றெனவே சொன்னார் நயந்து

முற்றும்.

207. ## சர்வ அதிசாரத்துக்குக் கஷாயம்.

மணைதாங்கி முத்தக்கா சித்திப்பட்டை
மருவியநீர்ப் பூலாவேர் நாவல்பட்டை
யணைதாங்கி மாதளையின் கொழுந்து பிஞ்சு
யருவேலி லாமிச்சு மாம்பட்டை யேலம்
விணைதாங்கும் விடையம் வேர்க்கொம்பு கோஷ்டம்
வெவ்விய சீரகமிரண் டாக்க கட்டி
இணைதாங்க வெயாடித்துக் காய்ச்சிக் கொண்டால்
அதிசார சுரங்கள் கடுகிப் போமே.

தண்ணீர் நானொன்றாய்க் காய்ச்சி
மூன்றுவேளை குடிக்கவும்.

தன்னிக்கு எண்ணெய்.

சித்தமல்லி, குதிரைவாலி, சிறுக்கீரை-
வேர், நெய்ப்புநெருஞ்சி, பெருந்தும்பை,
வெள்வேல் முன்னை, சதுரக்கள்ளி
பாதாளமூலி, வீளி, துராய், கிண்ணி,
நாரத்தை, சாரடைவேர், கண்டங்கத்திரி,
முடக்கொற்றான், யிந்துப்பு, மணித்தக்காளி
ஆதண்டை, உலகாங்காத்தான், ஏரிழுத்-
தாமரை, சிறுபீளை, வன்னெத்தி, உப்பிலி
உத்தாமணி - யிவை நானாழி யெண்ணெய்க்

கழுந்து உள்ளி, வசம்பு, பாம்புக்கண்டம்
புனாகம், பச்சைப்பாம்பு, தானைக்கொன்றான்
செண்பகமொட்டு அந்தெண்ணையில்
வடித்து உடம்பிலிட பதிமூன்று சன்னியுந்-
தீரும்.

__வேறு.__

வெப்புருந் திலவேர், ஆகாசக் கெருடன்-
வேர் ஒவ்வொன்று ஒரு யெலுமிச்சங்-
காயளவு - பச்சைப் பாம்பு கண்டம், மயிர்ப்-
பீலி, நாகப் பாம்பு இவை சுட்டு நல்-
லெண்ணையிற் பதத்தில் வடித்து உள்ளுங்
கொடுத்து மேலும் பூசச் சன்னி தீரும்.

__வேறு.__

கிளாவேர், வெட்டிவேர், இருவீழ்ச்சம்வேர்,
பெருங்கம்வேர், கொடிக்கள்ளிவேர்
நாயுருவிவேர், மருக்காரைவேர், ஈ. அ3 பூலி-
208. வேர், உள்ளி, வசம்பு, வேர்க்கொம்பு
திப்பிலி, அசமதாகம், வெளிச்சிப் பிசின்
இவை அத்தெண்ணையிலிட்டுக் கொதிப்-
பித்து நக்கவும். பூசவும். தீரும். கைகண்டது.

__சன்னிக்குப் பூசை.__

பூதகரப்பன் பட்டை, யெருக்கு, யெலு-
மிச்சை, ஆடாதொடை, வேலிப்பருத்தி,
மயிர்ப்பீலி, முருக்கு, முருங்கையது-

சோகை இருக்கக் காசம் — வெளிச்சைப்-
பிசின், ~~[illegible]~~ அசமோதகம், அக்கி,
மிளகு, திப்பிலி யிவை யாவும் வெண்ணை-
வேப்பெண்ணையிற் கொதிப்பித்து
நக்கவும். மேலுக்கு மிடவும். புகை
காட்டவும் தீரும்.

<u>வேறு:</u> சன்னிக்கு அஞ்சனம்.

வாகை விதை, மாந்துப்பு, திப்பிலி. மிளகு
யிவை தன்னிலைக்கக் கொண்டு வெள்ளாட்டு
கோமயத்தில் அரைத்து உண்டை பண்ணி
நிழலுலர்த்திக் காடியாலாகிலும் முலைப்-
பாலிலாகிலும் உரைத்துக் கண்ணிலிடச்
சன்னி மீளும்.

நசியம், அக்கி, மிளகு, திப்பிலி,
அ. மாந்துப்பு, வெங்காயம், பெருங்காயம்,
யெருக்கம் கொழுந்து இவையெல்லாம்
யெருக்கிலையிற் கட்டி உமிக்
காந்தலிற் புதைத்து நசுக்கி நசியம்-
பண்ண சன்னி தீரும்.

தீராத சன்னி தோஷங்களுக்கு
சூடு வைக்க.

இரண்டு கால்களிலும் பெருவிரலுக்கு நெத்தியிலும்
மேலாக உச்சந்தலையிலும்

காதுக்குக் கீழாவும் அறிவு வருஷேத்தின்
பொருட்டுச் சூதி வாயாவும் கிரந்தையாட
அறிவுண்டாயப் பொருக்கும் முந்தின
கிரந்தத்துக்குப் பாதம் - நெத்தி செவிக்கீழ்
அறிவு வருகிறதினம் பொருட்டு அறிவிக்கவும்.

காலின்ப் படாம் குதி உச்சந்தலையிலும்
வைக்கவும். நடுக்கிறதுக்கு முழங்கைக்-
கும் கீழ்க்கொண்ட அறிவு வருகிறதினம்
பொருட்டு அறிவிக்கவும்.

அக்கினி தோஷத்துக்கு நசியம்.

நூசணிப் பூவை முலைப்பாலில் கசக்கி
பச்சைக் கற்பூரமும் அக்கும் வெங்காரமும்
பொரித்துக் கூட்டி அறிவாலும் பொருட்டு
நசியம் பண்ணவும். யிது முன் சொன்ன
கிரந்தம்.

209. மிருகத்தின் கண்ணுக்கு நசியம்.

பச்சைனாவியும் கற்பூரமும் மிளகும்
தாய்ச்சமன் கூட்டி அரைத்துக் கடுகுப் பிரமாணம்
உண்டை பண்ணி கைவிட்ட கண்ணுக்கு
முலைப்பாலில் உடனே நசியம் பண்ணி
உடனே எழுந்திருக்கும்.
விஷம் போட்டாலும் எழுந்திருக்கும்.

சன்னி வாத அரத்துக்கு.

எண்ணெய்.

கார்கடக சிங்கி, சிறுதேக்கு, திப்பலி,
கடுக்காய், தாண்றிக்காய், சுக்கு, கோஷ்-
டம், மரமஞ்சள், சிறுவழுதுணை வேர்,
இம்பூரல் வேர் யிவை சிற்சமன் கூட்டி
தாதுவிளம் வேர் ஒருபிடி, யிருதப்பழம்-
ஒருபிடி, சந்தனம் எலுமிச்சங்காயளவு,
நற்சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, பசுவின்-
நெய்யும் நல்லெண்ணையுங் கலந்து
யிந்த மருந்துகள் போட்டு யெரித்து வடித்து
பூசவும். உள்ளுங் கொள்ளவும். சன்னி
வாதந் தீரும்.

<u>யிதுவும்.</u> பேய்ப்பாச் சோத்தி வேரு-
மிளையும் மஞ்சள் நொச்சின், வாதமடக்கி,
அ. வேலிப்பருத்தி, சுக்கு, திப்பலி, சீதேவியார்-
செங்கழுநீர் யிவை வகைக்கு ஆறுரி
வேர் வகைக்கு — குறிஞ்சின் வேர், நன்னாரி-
வேர், ஈ. அரமூலி, கருவேல் வேர், சிவனார்-
வேம்பு, ஒரிதழ்த் தாமரை, சடேலமும்
நிலக்குமிழ் வேர், கோஷ்டம், அதிமதுரம்,
தேவதாரம், சேவியம், அரத்தை, சதகுப்பை,

பெருங்குரும்பை, திப்பலி, கருஞ்சீரகம்,
இந்துப்பு, நற்சீரகம், சன்னசாரை,
கடுகு, வெளிச்சிப் பிசின், உள்ளி, வசம்பு
யிவை வகைக்கு விராகனிடை-3 கசாயத்
தண்ணீர் வார்த்தரைத்து நல்லெண்ணை
ஆமணக்கெண்ணை யோகிறும் இரண்டுபடி
எண்ணையில் முன்சாறும் விட்டு அரைத்த
சாந்தும் போட்டு பதத்தில் வடித்துப் பூசவும்,
தலைக்கு வார்க்கவும். மெள்ள நனைக்கவும்
மற்றனால் உள்ளுங் கொண்டு
மேலுக்கும் பூசவும். தீரும்.

10. குளிர் சுரத்துக்கு எண்ணெய்.

வெருகாங்கிழங்கு மேல்த்தோல் சீவிப்-
போட்டு மூன்றுபலந் தரித்திடித்துத் தூணி
பத்துக் காடியிலிட்டுக் குறுணியாகக்
காச்சி ஆரணைவேர், திருகுளிஞ்சா,
கரவணை, பேராமட்டி, அமுக்கிரா, முன்னை
ஒவ்வொன்று பத்துப்பலந் தரித்திடித்துத் தண்
ணீர்விட்டு எட்டொன்றாய்க் காச்சி
வடித்து இரண்டுவகைக் கஷாயமுங் கூட்டி
நல்லெண்ணெய் முன்னாழி விட்டு யிதுக்கி
கற்கம் — சுக்கு, மிளகு, திப்பலி, சதகுப்பை,

கொத்தமல்லி, அதிவிடையம், வெப்பாலரிசி
சிறுதேக்கு, பெருங்குரும்பை, உள்ளி, வசம்பு
ஒன்றொன்றுக்கு வகை முக்காஞ்சி எட்டு
அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துப் பூசவும்
நக்கவும். இன்னரோகந்தீரும் கைகண்டது.

பித்தரோகத்துக்கு எண்ணெய்.

சித்தாமுட்டிவேர், சீந்தில்தண்டு, இருவேலி-
வேர், இலாமிச்சம்வேர் இவை கஷாயம்
பண்ணி வார்த்துக் கொண்டு இதுக்கு கற்கம்-
அ. சீதேவி செங்கழுநீர் வேர், பெருந்தும்பைவேர்
துவர்ச்சிகை, முத்தக்காசு, நன்னாரிவேர்
கோஷ்டம், கடுகுரோகணி, ஏலம், இல-
வங்கம், அக்கு யானைவெள்ளாம் ~~ஒன்றொன்று~~
ஒன்றொன்றுக்கு -1 கழஞ்சு - நல்லெண்ணை
நாழியிலரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துப்
பூச பித்தரோகந் தீரும். கைகண்டது.

வேறு ரோகத்துக்கு தலைவலிக்கு எண்ணெய்.

சீதா செங்கழுநீர் சடேவமும் பூசணிக்காய்,
பொன்னாங்காணி, லாமிச்சம், கற்றாழை
பூலா, சித்தாமுட்டி, இஞ்சி, பருவேலி,
சீந்தில், செங்கழுநீர்க்கிழங்கு யாவையும்

வேரும் தண்டும் இடித்துவைத்து
காலையிட்டுத் திருத்தி அதிமதுரம் திப்பிலி
௨11. அதிலிட்டு பெருங்குரும்பை சர்க்கரை
கூட்டி காலையிட்டுக் கூட்டி பத்தாய்ப்
போட்டுக் கஷாயங் கூட்டி பஞ்சதீபியம்
சந்தனம், இருவேலி, லாமிச்சை, முத்தக்காசு,
கடுகுரோகணி, நாகப்பூ, நன்னாரிவேர்
நல்லெண்ணெய் நாழி மற்ற மருந்-
தெல்லாம் நாழிக்குக் கலந்து விழுக்காடு
எழுமிச்சம் பழச்சாறு படி - க யிவைகளெல்லா-
மொன்றாய் விட்டு அருபேத்தி மெழுகு
பதத்தில் வடித்துத் தலையில் வார்க்கத்
தலைவலி சுரமுந் தீரும்.

வேறு பழஞ்சுரத்துக்கு நெய்

பேய்ப்புடல், நன்னாரிவேர், நெல்லிமுள்ளி-
தான்றிக்காய், கருமுகை மொட்டு,
முந்திரிகைப்பழம், அதிவிடையம், பெருந்-
துத்திவேர், வெந்தயம், சீரகம், உள்ளி,
வசம்பு, சித்தாமுட்டிவேர், அதிமதுரம்,
அ- ஏலம், இலவங்கம், கீழ்காநெல்லிவேர்,
ஆவாரிவேர் ஆதொண்றாக்க னாளி,

வெண்ணைக்க் களைந்து வழுக்காறு
அரைத்துக் கரைத்து நெய் நாளிக்குப்
பேய்ப்புடலங்காய் நாணாளி உண்டு வடித்து
நக்க பழுவெதுப்பும் பித்தசன்னியும் சித்தப்-
பிரமையுந் தீரும்.

அரம், வீக்கம், கழிச்சலுக்குக் கஷாயம்.

கையாந்தகரை தூதுவளை
கடிய நொச்சி பிரமியுடன்
மெய்யாய் விளங்கும் நீர்முள்ளி
வீறாகிய மல்லிகைத் தண்டு
செய்யார் கரந்தை பேராமுட்டித்
திகழுஞ் சுக்கு நுருக்கியிட்டு
துய்யக் காய்ச்சிக் குடிப்பீராய்ச்
அரமும் வீக்கம் மோடிடுமே.

அதிசாரத்துக்கு

அக்கு முத்தக்காசுடனே பேராமுட்டி
துலங்கிய பங்கம்பாளை சிறுகாஞ்சொறி
தக்கவாளச் சுண்டன்வேர் புளியம் பட்டை
தகுமெலந்தைப் பட்டை காட்டாத்திப் பூவும்
மிக்கபெரு மாம்பட்டை குடசப் பாலை
21 ல. மேவுமிரு ணாரிந் நெல்லிக்காய்க் காய்ச்சி
யொக்கவதி விடையமொரு காசுக்கட்டி
யுகந்துகொள்ள அதிசார மோடிப் போமே.

பிள்ளைகள் கரப்பன் கட்டுக்கு மருந்து.

பூதகரப்பன் பட்டை, ஜெங்கத்தாரிப்-பட்டை, வெம்பாடம் பட்டை, வெப்பாலை பட்டை, நீரடிமுத்து, கார்போகரிசி, காட்டுச்-சீரகம், கருஞ்சீரகம், குவளைவேர்ப்-பட்டை, சங்கங்குப்பி வேர்ப்பட்டை, வகைக்கு ஒரு காசிடை கால்ப்படி எண்ணெயில் அரைத்துப் போட்டுச் சூரியபுடமாக வைத்து மூன்று நாட்கள் கொடுக்க எப்படிப்பட்ட கரப்பான் கட்டுகளும் தீரும்.

பத்தியம் பிடித்தால் மெத்த நன்று.

இது கைகண்டது.

இருமலுக்கு மருந்து.

அ. இரதம் கெந்தக மாசிரும்
என்றும் நாவி மனோசிலையும்
மருவு தாள பற்பகம்
வன்மை திப்பலி சுமண்கட்டி
இருமை சொச்சி கண்டங்கத்திரியை
ஒங்கும் தொண்டை யிலைச்சாற்றில்
எருக்கின் அரைத்து நன்றாக
மெர்க்கும் பயறு அண்டையச்சயவே.

செய்த உண்டைக் கனுப்பானம்
சிறந்த சர்க்கரைத் தேன் நெய்கொள்ள
அய்ய மான அவாசம்பத்தும்
ஆன யீனை யாருமொருநும்
உய்ய வேறு யாடமில்லை
யென்றே ஓடிப் போய்விடுமே.

கெர்ப்பந் தரித்து விழுந்து போறதுக்கு.

வெளுத்த பட்டை மரமஞ்சள்
மிளகு கடுகு பெருங்காயம்
அழுத்த முடைய சதகுப்பை
அதிக வசுவங்கநு சீர்தாரி
வழுத்த மொளிய கிராக்கள்
மருவுஞ் சாதிக்கா யுடனிஞ்சி
பெருத்த கிராம்பு வசுவாசி
பேரான நேர்வாளந் திரிகடுஞ்சி.

நத்தைச் சூரி கொடிவேலி
நல்ல கொன்னை தாழுவணை
முத்தக் காசு அகில்வில்வம்
213. முடக்கொற்றான் விளி நிலக்கடம்பும்
மத்த வட்டத் திருப்பியுடன்
வாகா யிதுமுன்று வேருடன்
உத்த நறுக்கி நாலுபடி
நீரில் காச்சி ஒருபடியாம்.

படியாவும் கசாய மதிக்கற்கம்
பதிந்தே அரைத்து தின்பாகு
அடவாகு சித்ர மணக்கெண்ணெய்
பருணாழு பதிக்காச்சி வடித்தபின்பு
குடியா மெண்ணெய்க் களஞ்சி நுக்கிக்
கொள்ளை வல்லி. 3 மாகின்
வெடுகை கொப்பு நோகமென்னாம்
வயிறு கழிந்த வாய்விடுமே.

—

விடுமே களஞ்சி மைத் தென்ப்பான்
